
ஸ்பைடர் படை!
மினி
லயன்
ரூ.2.50
ஸ்பைடரின்
முழுநீள சாகஸம்!




**வாசகர்கள் கவனத்திற்கு:**

இந்தக் கதை ஸ்பைடர் நீதிக் காவலனாக மாறுவதற்கு முன்பு நிகழ்ந்ததாகும்.
அதனால் ஸ்பைடரை வில்லனாகப் பார்க்கும் பொழுது திடுக்கிட வேண்டாம்!


சிறு வெடி ஒன்றை ஓசையின்றி வெடிக்கச் செய்தான்!
டமால்!
ஒருலட்சம் டாலர் மதிப்புள்ள வைரக் கற்கள்-அத்தனையும் இனி எனக்கே சொந்தம்! இந்த திறமையான தேட்டையைச் செய்ய என்னை விட்டால் ஆளே கிடையாது!
ஆனால் அவனது வெற்றிக் களிப்பிற்கு வினை தோன்றியது கீழே!
நமது ரோந்துக் கார்களின் சைரன் ஒலியை நிறுத்துங்கள்! ஆர்டினியை கையும் களவுமாய் பிடிக்க வேண்டும்!


தகவல் அறிந்து தகுந்த முன்னேற்பாட்டுடன் வந்தவர்கள் துப்பறிவாளர்களான கில்மோரும், பீட்டரும்-
இன்று இரவு ஆர்டினி இங்கே கைவரிசையைக் காட்டப் போகிறான் என்று நமக்கு தகவல் கிடைத்தது அதிர்ஷ்டமே!
உண்மைதான் லெப்டினண்ட்! ஆனால் இவன் ஒரு தந்திரக்கார எத்தன்! கடந்த ஐந்து வருடங்களாய் நாமும் விடாது அவனைத் துரத்திக் கொண்டுதான் வருகிறோம்-ஆள்தான் வசமாய்ச் சிக்கமாட்டேனென்கிறான்!
போலீஸ் வியூகம் அமைத்துக் கட்டிடத்தைச் சூழ்ந்தது-ஆனால் ஆர்டினியும் அதைக் கவனிக்கத் தவறவில்லை!
போலீஸ்! பொறியில் சிக்கிய எலிபோல எந்தப் பக்கமும் போக முடியாதபடி வளைத்துக் கொண்டு விட்டனரே!
ஒரு சிறு நிழல்கூட இந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே போகக் கூடாது, ஜாக்கிரதை!
இந்தப் பின்பக்க அவசரவழியினைச் சுற்றி நின்று கொள்ளுங்கள்! மேலும் சிலர் மாடிப் படிக்கட்டின் வழியே மேலே ஏறி வாருங்கள்-நாங்கள் லிப்டினைப் பயன்படுத்தி உச்சிக்குச் செல்கிறோம்!


அதே சமயம் மற்றொரு அடுக்கு மாடிக்கட்டிடத்தின் உயரே, பக்கச் சுவரில் ராட்சத சிலந்தி போன்று ஊர்ந்து வந்தது ஒரு கரிய உருவம்!
உன்னை முதலில் நெருங்கப் போவது இந்த ஸ்பைடர் தான்! ஆர்டினி
பெரும் இடைவெளியில் அமைந்த அந்த மாடிகளிடையே- நீண்டு செல்லும் வலைப்பின்னலை உருவாக்கிப் பறந்தது அந்த வினோத உருவம்-
நான் காண்பது நிஜம்தானா? உயரே வானில் ஏதோ பறப்பது போல் தெரிகிறதல்லவா?
மொட்டை மாடியில் நின்ற ஆர்டினி அவ்வுருவத்தின் திடீர் வருகையால் திடுக்கிட்டு-
ஏ-ய்! நீ-நீ-கிட்டே வராதே! சுட்டு விடுவேன்!


திடீரென விந்தையான வலைப் பின்னல் ஆர்டினியின் கையைச் சுற்றிப் படர-
ஆஆ! என் கை-சிக்கிக் கொண்டு விட்டதே!
புத்திசாலித்தனமாய் நடந்து கொண்டால் இந்தப் போலீஸின் பிடியிலிருந்து நீ தப்பலாம் ஆர்டினி!
நான்தான் ஸ்பைடர்! என் ஆணைக்குக் கட்டுப்பட்டால் உன்னைக் காப்பாற்றுவேன் நான். என்ன சொல்கிறாய்?
என்ன ஆணை? விபரமாய்ச் சொல்-
மாபெரும் குற்ற சாம்ராஜ்யம் ஒன்றை உருவாக்கப் போகிறேன். அதற்கு உன் போன்ற ஒரு நபரின் உதவி தேவை. என்னிடம் நீ பணி புரிந்தால் உன்னைப் பெரிய செல்வந்தனாக்குவேன்!
இப்போது இந்தப் போலீஸிடமிருந்து என்னைக் காப்பாற்றுவாய் அல்லவா- ஓ-கே-அது போதும்! சம்மதிக்கிறேன்!
ஆனால் அவர்கள் நம்மைக் கவனித்து விட்டனர்! தப்பிப்பது மிக சிரமம்!
என் முதுகில் தொற்றிக் கொள், ஆர்டினி-அந்த முட்டாள்களை ஏமாற்றுவது சுலபம்!


கட்டிடத்தின் உச்சியை அடைந்தது போலீஸ்-
கதவு பூட்டப்பட்டிருக்கிறது! ஆனுல் ஆர்டினியைப் பிடிக்க இது ஒரு பெரிய தடை அல்ல!
ஆர்டினி, துப்பாக்கியைக் கீழே போடு! தப்ப முடியாது உன்னுல்!
ஆனுல்-
ஆளைக் காணவில்லையே! எப்படி மறைந்தான்?
எங்கும் போயிருக்க முடியாது! சீக்கிரம், இந்தப் பக்கமாக வாருங்கள்!
ஏதோ ஒன்று ஆர்டினியைச் சுமந்துகொண்டு பறக்கிறதே
என்ன ஜந்து வென்று தெரிய வில்லை-மனிதனு இல்லை பிசாசா? எதுவானுலும் தப்பிச் செல்ல அனுமதிக்கலாகாது! சுடு, கில்மோர்


மனிதனைத் தெரியவில்லை! ராட்சத சிலந்தி போன்று உள்ளது!
கில்மோர் பேசுகிறேன்! உங்களால் இனி தப்ப முடியாது-துப்பாக்கிக் கொண்டு சரமாறியாய்ச் சுடப்போகிறோம். பேசாமல் சரணடைந்து விடுங்கள்!


அடுத்த சில விநாடிகளில் துப்பாக்கிக் குண்டுகள் இருபக்கமும் மாறிமாறி சீறிப்பாய்ந்து சென்றன-
செத்தோம்! ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சி நம்மைத் தப்ப இயலாது செய்து விட்-டனர்-முயற்சியைக் கைவிட்டு சரணடைந்து விடுவோம்!
பயப்படாதே, ஆர்டினி-இந்த ஸ்பைடரை அவ்வளவு எளிதில் வீழ்த்திவிட முடியாது!


சடாரென வாயுத்துப்பாக்கியை இயக்கி சுடும் போலீஸாரைத் திக்குமுக்காட வைத்தான் ஸ்பைடர்!
பீட்டர்ஸ-என்னுல் பார்க்க முடியவில்லை-
சுடு! எப்படியும் வீழ்த்த வேண்டும்!


குழப்பமடைய வேண்டாம்! விபரீதம் எதுவுமில்லை-


அதே சமயம் நூறு கஜ தொலைவில் ஸ்பைடரும், ஆர்டினியும் பததிரமாய்த் தரை இறங்கினர்-
அது ஆபத்தற்ற வாயுதான் ஆர்டினி. கண்களுக்கு சிறிது நேரம் எரிச்சல் தரும் அவ்வளவே-
ஆனால் பிரயோகிக்கும் இவனை அது கொஞ்சமும் பாதிக்கவில்லையே! உண்மையில் இவன் மனிதன்தானா?


ஆஆஆ!
உங்களது ரோந்துக்கள் தேவைப்படுகிறது எனக்கு!
அடுத்து தன் விநோத துப்பாக்கி மூலம் வெளிப்படுத்திய நைலானை விட வலுவான, பசைத் தன்மை கொண்ட இழைப் பின்னலால் அருகாமையில் நின்று கொண்டிருந்த காவலர் இருவரைக் கட்டிப் போட்டான் ஸ்பைடர்-


காரில் ஏறி முழுவேகத்தில் கிளப்பினான் ஸ்பைடர்!
இப்போது எனது மாளிகை நோக்கிச் செல்கிறோம், ஆர்டினி!
நகர போலீஸ் தலைமையகத்தில்-
எல்லா பிரதான சாலைகளிலும், கண்-காணிப்புத் தடை ஏற்படுத்துங்கள்! மேலே ஹெலிகாப்டர் ரோந்துக்கும் உடனே ஏற்பாடு செய்யுங்கள்!
மாநில, மாவட்ட போலீஸ் அனைத்தும் உஷார்ப்படுத்தப் பட்டுள்ளன!
அந்த ஸ்பைடர் பயலை எப்படியும் கண்டுபிடித்தாக வேண்டும்! சட்டம் இதுவரை சந்தித்தறியா பேராபத்தான மனிதன் அவன்! பூட்டுடைப்பில் கில்லாடியான ஆர்டினியையும் சேர்த்துக்கொண்ட பின் அவன் வலு அதிபயங்கரமானதாகி விடும்!
அதே சமயம் பிறிதோரிடத்தில்-
இனி போலீஸ் நம்மைப் பின்தொடர வாய்ப்பில்லை, ஆர்டினி. நான் அவர்களை விடப் புத்திசாலி!


மீதப் பயணத்தை ரயில் மார்க்கமாக முடிப்போம்!
817
பொழுது புலரும் நேரத்தில் ஸ்பைடரின் கோட்டையைச் சென்றடைந்தனர்-
நான் ஏற்கனவே கூறியபடி எனது குற்ற சாம்ராஜ்யத்திற்கென்று உருவாக்கும் ராணுவத்தின் முதல் நியமனம் நீதான் ஆர்டினி. இந்தப் படைக்கு மேலும் வீரர்கள் தேவை-அதற்கு நீ உதவப் போகிறாய். அந்தத் திரையைக் கவனி-என் திட்டத்தை விளக்குகிறேன்-



திரையில்- ஒரு மலை முகட்டும், உறுதியான ஒரு சட்டிடமும உருப்பெற்றது-
அதுதான் ஸான் பாலோ சிறைச் சாலை! கடுமையான காவல் கண்கா ணிப்பிலிருந்து தப்ப முடியாது!
ஆனால் ஒரே ஒரு நபர் கட்டாயம் அங்கிருந்து தப்பியாக வேண்டும்-ஏனென்றால் அவன் எனக்குத் தேவைப்படுகிறான்! சமூக விரோதக் கூட்டத்தின் மத்தியில் 'புரபஸர்' என்ற பெய ரால் அழைக்கப்படும் பெல்ஹாம் என்பவனே அவன்!
உன்னை உள்ளே அனுப்பி அவனை மீட்கப் போகிறேன்! சரித்திரம் கண்டிராத சாகஸ சம்பவமாய் இருக்கும் அது!
உனக்கென்ன பைத்தியமா- அது எப்படிச் சாத்தியம்?


அதே சமயம் போலீஸின் தேடும் பணி முடுக்கி விடப்பட்டு குற்றவாளிகளின் நடமாட்டம் உள்ள இடங்கள் என்று கருதப்பட்டவையெல்லாம் சோதனை - யிடப்பட்டன-
POLICE
நீங்கள் தேடும் ஸ்பைடர் இங்கு கிடையாது! அப்படி அவன் இங்கிருந்தாலும் திரும்பவும் உங்களை முட்டாளாக்கித் தப்பி விடுவான் என்பதில் சந்தேகமே கிடையாது!
HIGHWAY PATROL



துப்பறிவாளர்களான கில்மோரும், பீட்டரும் வாகனங்களை நிறுத்திச் சோதனை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.
ஸ்பைடரோ, ஆர்டினியோ சிக்கவில்லையே! எப்படியோ நம கண்களில் மண்ணைத் தூவி தப்பி விட்டனர்!
அப்படி அகப்படாது தப்பிச் சென்றிருக்கும் பட்சத்தில் அதற்கு நாமே பொறுப்பாளியாகி விடுவோம்!
ஆமாம்! ஸ்பைடர் தன் அடுத்த குற்றச் செயலில் ஈடுபடும் முன் இருவரையும் கண்டுபிடித்தாக வேண்டும்! எனக்கென்னவோ அவன் பெரிய காரியம் ஒன்றிற்குத் திட்டமிட்டிருக்கிறான் என்றே படுகிறது!


அதே சமயம் ஸ்பைடரின் கோட்டையில்-
ஆர்டினி, நான் பெல்ஹாமை சிறையினின்று மீட்க ஆயுத்தமாகி விடடேன்! அவன் எனது ராணுவப் பணிக்குச் சேர்க்கப்படும் இரண்டாவது நபர்- பயப்படாதே, போலீஸாரால் நமமைப் பிடிக்க முடியாது!


டொரிமோ வளைகுடாவில் அமைந்த அந்தத் தனிமைச் சிறையின் மேலே பனிமூட்டம் கனத்துக் குவிந்திருந்தது-
குற்றவாளிகள் அமைதியற்ற மனநிலையுடன் காணப்படுன்றனர். அசம்பாவிதம ஏதோ நிகழப்போவதாய்த் தெரிகிறது. அது என்னவென்றுதான் தெரியவில்லை!
எது நடந்தாலும் அதனைச் சமாளிக்க நம்மிடம போதுமான காவலர்கள் இருக்கிறார்கள். பயப்பட வேண்டியதேயில்லை!



புரபஸர் எனப்படும் பெல்ஹாம் மகாத் திறமையான ஒரு விஞ்ஞானி. ஆனால் கிரிமினல் மூளை கொண்டவன்-
அதே சமயம், பனிமூட்டத்தினிடையே தாழப் பறந்து வந்தது ஒரு புதுவகை ஹெலிகாப்டர்-
அதில் ஸ்பைடரும்- ஆர்டினியும்!
உனக்காக பிரத்யேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன பெல்ஹாம். மற்ற கைதிகளுடன் உன்னைச் சேர்த்தால் ஆபத்து என கருதுகிறார் வார்டன்!
குற்றவாளிகள் மத்தியில் புகுந்து குழப்பத்தையும் கலவரத்தையும் ஏற்படுத்து! அனைவரையும் தப்பிக்கச் செய்யவிருப்பதாக அவர்களிடம் கதை விடு!
விரைவில்-
நான் உங்கள் பக்கம்தான் ஆர்டினி. பெரிய அளவுக்கு சிறை உடைப்புக்கு எல்லா முன்னேற்பாடுகளும் செயல்பட்டு விட்டதா?
நீங்கள் ஸ்பைடரையும் என்னையும முழுமனதுடன் நம்பலாம்!


ஸ்பைடரின் ஓசையற்ற துப்பாக்கி சிலந்தி வலைப்பின்னலால் பாலம் ஒன்றை உருவாக்கியது-
சேற்று நிலப்பகுதியைக் கடக்க இந்த ஏற்பாடு- ஆர்டினி தன் பங்கைச் செம்மையாக நிறைவேற்றுவான் என நம்புகிறேன் என் குற்ற சாம்ராஜ்யத்தில் தோல்வி என்பதே கூடாது!
என் திட்டம் குறிப்பிட்ட விநாடிப் பொழுதில் நிகழ்த்த வேண்டிய ஆபத்தான பணி. முதலில் டொரிமோ வளைகுடாவின் கடற்படைத் தளத்தில் சென்று பார்ப்போம்!
இருள் கவிழ்ந்த வேளை- கப்பல் தளத்தில்-
முதலில் காவல் வீரர்களைக் கவனிப்போம்!
மயக்க வாயுவைப் பீச்சியடிக்க அனைவரும் மயங்கி விழுந்தனர்-
எ-என்ன ஆஆ!



மறுவிநாடி ஸ்பைடரின் வெடிகுண்டுகள் விண்ணதிரும் ஓசையுடன் தீப்பிளம்புகளை உண்டாக்கின-
டம் டமால்!
என் திட்டத்தின் முக்கிய பகுதியான திசை திருப்பும் முயற்சியே இது! குழப்பம் ஏற்படுத்துதல் மிக அவசியம்!
அவசர ரேடியோச் செய்தி கில்போருக்கு எட்டியது-
டொரிமோ தளத்தில் குண்டுவெடிப்பு நாசச் செயல் நடந்திருக்கிறது! சிறைச்சாலையிலிருந்து ஐந்து மைல் தொலைவில் இருக்கிறது இந்த கப்பற்தளம். நிச்சயமாக இது ஸ்பைடரின் வேலைதான்- அடுத்து ஒரு மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுகிறானெனத் தெரிகிறது! கிளம்புவோம் நாம்!


21
அங்கே-
டமார்
பயங்கரமான நாசவேலே! யாரோ கப்பல்களுக்கெல்லாம் குண்டு வைத்திருக்கிருன்!
அது எப்படி முடியும்? நாசகாரன் அத்தனே காவலேயும் மீறி உள்ளே நுழைய முடியாதே!



பிறர் அறியாவண்ணம் மேலிருந்தவாறு நடக்கும் குழப்பத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான் ஸ்பைடர்-
சரியான முட்டாள்கள். என் திட்டப்படியே அனைவரும் குண்டு வெடிப்பைக் காண கூடிவிட்டனர். நீர் மூழ்கிக் கப்பல் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் காவல் குறைந்திருக்கும் இப்போது!
மறுவிநாடி வலைப்பின்னலை உருவாக்கி கீழ்நோக்கிப் பாய்ந்தான்-
இந்தச் சிறு ரக நீர் மூழ்கியே இப்போது எனது தேவை!
குளோரபாரம் கொண்ட துணியை முகத்தில் அழுத்தி இருந்த ஒரே காவலாளியையும் விழச் செய்தான்-
நன்ருக அயர்ந்து தூங்கு நண்பனே!


சற்று நேரத்திற்கெல்லாம் கில்மோரும் பீட்டரும் துறைமுகத்தை வேகமாய் வந்தடைந்தனர்-
சிறுரக நீர்மூழ்கி ஒன்றைக் காணவில்லை! காவலனை யாரோ மயக்கமுறச் செய்து கடத்திச்சென்றிருக்கின்றனர்!
இது நிச்சயம் ஸ்பைடரின் கைவரிசைதான் பீட்டர்! ஸான்பாலோ சிறைச்சாலை கடலை ஒட்டி வெகு அருகாமையில்தான் உள்ளது. அதுதான் அவனது இலக்கு!


சிறைச்சாலை வார்டன் உடனே உஷார்ப் படுத்தப்பட்டார்-
பைத்தியக்காரத்தனமாய் பேசாதீர்கள் லெப்டினெண்ட்! எந்தக் கொம்பனாலும் சிறையை உடைத்து உள்ளே புகுந்துவிட முடியாது! ஓ.கே. நீங்கள் கேட்டுக் கொண்டதற்காக தீவிரக் கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்கிறேன்!


சிறைச்சாலையினுள்-
இங்கே எந்தப் பிரச்சனையும் இல்லை! அறைக்கதவு எது திறந்தாலும் அபாய மணி ஒலி எழுப்பி விடும்!
ஸ்பைடர் என்றொரு மனிதன் தன கைவரிசையைக் காட்ட முற்படுவான் என போலீஸ் எச்சரித்துள்ளது!
அதே சமயம் ஸ்பைடர் டொரிமோ வலைகுடாவின் கீழே விரைந்து பயணமாகிக் கொண்டிருந்தான்-
சிறைச்சாலையினுள் என் திட்டம் துவங்கும் நேரமிது. ஆர்டினி சரியாகவே செயல்படுவான்!
ஆயுதபாணிகளாய் திடீரென வெளிப்பட்டனர் கைதிகள்-
பலத்த பாதுகாப்புடன் கூடிய கட்டிடப் பகுதியை வெடியால் தகர்த்தான் ஆர்டினி
ஆஆஆ!
ராய் ஆர்டினி தன் பங்கை திறம்பட்டவே ஆற்றியிருந்தான்-
ஆ!



சிறைச்சாலையின் சைரன்கள் அனைத்தும் அலறின-
ஊ ஊ ஊ! குயீவ்!
ரட்ரட்ட்ட




அதே சமயம் கப்பல் தளத்தில்-
சிறைச்சாலை நோக்கிக் கிளம்புங்கள்! பலத்த காவலுடன் சுற்றி வளையுங்கள்! சிறை தகர்க்கப்படக்கூடும்!


ஸ்பைடர் கடத்திச் சென்றிருக்கும் நீர்மூழ்கியில் மூன்றுபேர் மட்டுமே செல்லமுடியும். எனவே, இரண்டு பேரை மட்டுமே கடத்தி வருவது ஸ்பைடரின் நோக்கமாயிருக்கக்கூடும். ஆனால் அதுவே அவனுக்கு ஆபத்தாய் அமையப் போகிறது!
எதனால் அப்படி கூறுகிறாய் கில்மோர்?
சிறைச்சாலையின் கீழிருக்கும் குன்றை நோக்கித்தான் நீர் மூழ்கி செல்லும். கடலடி வெடிகுண்டைப் போட்டு ஸ்பைடரையும் நீர் மூழ்கியையும் ஒரு சேர அழிப்போம்!
இருவரும் ஏறிக் கிளம்பினர்
நீர் மூழ்கியினுள்-
இந்த ஸ்பைடரின் திட்டங்கள் தோல்வியையே சந்தித்தறியாதவை- என் திறமைக்குச் சவால் விட எவருமே கிடையாது! இன்னும் பத்தே நிமிடத்தில் என் சகாக்களை பத்திரமாய் மீட்டு வந்து விடுவேன்!


கில்மோர், நீர்மூழ்கியினை சமீபித்து விட்டோம்! கருவி தெளிவாய்க் காட்டுகிறது!
கடலினுள் வெடிகளை வீசுங்கள்! ஸ்பைடரின் பயணத்தைத் தடுக்க வேண்டும்! அவன் நீர்மூழ்கியைக் கடத்திச் செல்வது சிறைக் குற்ற வாளிகளை மீட்கத்தான்!
கடலடி வெடிகுண்டுகள் வளைகுடாவையே கிடு-கிடுக்க வைத்தன-
பூம்!
கில்மோர், அதோ நீர்மூழ்கியின் கதை முடிந்தது! ஸ்பைடரும் சேர்ந்து சமாதியாகியிருப்பான்!
அவ்வளவு உறுதியாய்க் கூறாதே-அவன் பலே-கில்லாடி!


வெடிகுண்டுகளுக்கு இரையான நீர்மூழ்கி
யின் சிதைவுகளை ஆராய ஆட்கள்
அனுப்பப்பட்டனர்
உள்ளே எவரும் உயிருடன் இருக்கும் வாய்ப்பே
இல்லை-நமது கப்பற்படையுடன் மோதத் துணிந்தது
ஸ்பைடர் செய்த பெரிய தவறு!


கீழே ஆராயச் சென்றவர்களின் கண்டுபிடிப்பைக்
கேட்டறிய நாம் காத்திருக்கத் தேவையில்லை!
சிறைச்சாலை நோக்கி விரைவோம். ஸ்பைடர்
மரணம் நிச்சயமானால் அவனது திட்டமும்
அங்கே தோல்வியைத் தழுவியிருக்கும்.
சந்தேகமில்லாமல்
தோல்விதான்!



நீர் மூழ்கியிலிருந்து தப்பி விட்டிருந்தான் ஸ்பைடர்-
பாறை ஒன்றை அகற்றி கீழிருந்த பொருளை எடுத்தான்-
எல்லாம் திட்டமிட்டபடியே நடக்கின்றன! ஆளற்ற நீர்மூழ்கிக் கப்பலை குண்டு வைத்துத் தகர்த்து வெற்றி முழக்கமிடும் முட்டாள்கள்! நான் இறந்து விட்டதாக கருத வேண்டும் என்பதுதானே என் நோக்கம்!
சிறையிலிருந்து ஆர்டினியையும் பெல்ஹாமையும் வெளியே கொண்டுவர இதுதேவை. வெகு சீக்கிரம் அமெரிக்கா இந்த ஸ்பைடரைப் பற்றித் தெளிவாய் தெரிந்துகொள்ளும் கூடிய விரைவில் குற்ற சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னனாய்த் திகழ்வேன்!
அடுத்து கிடுகிடுவென பாறையின் மேலே ஏறினான்-
சிறையினுள் நடக்கும் கலகத்திலிருந்து விடுபட்டு தனித்து வந்திருக்கும் ஆர்டினியும், பெல்ஹாமும்-என்வருகையை எதிர்பார்த்துக்காத்து நிற்கக் கூடும்!



உயரமான நீர்த்தொட்டியின் மேலே காட்சி தந்தனர் இருவரும்-
புரபஸர், அதோ ஸ்பைடர்-தனது வலைப்பின்னலை உருவாக்கி இங்கு வரப் போகிறான்!
சந்தேகமில்லாமல் அவன் ஒரு மாமேதை ஆர்டினி! என்னை விடுவிப்பதின் மூலம் சட்ட விரோதச் செயல்களுக்கு எனது அறிவியல் திறமையைப் பயன்படுத்திக் கொள்வான்!
கீழிருப்போர் அறியாவண்ணம் வேகமாய்ப் பறந்து வந்தான் ஸ்பைடர்-
சிறைச் சலவரம் காவலரது கவனத்தைத் திருப்ப சரியானதொரு ஏற்பாடு!
இந்த ராக்கெட்டை ஆளுக்கு ஒன்றாய் உடலோடு பொருத்திக் கொள்ளுங்கள்! ஹெலிகாப்டர் ஒன்று உங்களுக்காக தயாராய் இருக்கிறது!
இந்த ராக்கெட் கருவி பெரும் ஓசையை ஏற்படுத்துமே-அதனால் நாம் கவனிப்புக்கு ஆளாக நேரிடுமல்லவா?
அதற்கும் ஒரு ஏற்பாடு செய்து விட்டேன்! கீழிருப்போர் தப்பிச் செல்ல பிரதான வாசல் கதவைத் திறந்துவிடப் போகிறேன்!


வாசல் கதவு, உயரமான கண்ட்ரோல் மேடையில் அமைக்கப்பட்ட மின் சாதன அமைப்பு மூலம் இயங்கும் ஆற்றல் கொண்டது-
ஆஆஆ! கைகளை நீட்ட முடியவில்லையே!
பேசாமல் அறைகளுக்குத் திரும்புங்கள்! உங்களால் வெளியே போக முடியாது!
முடியாதா? அதையும் தான் பார்ப்போமே!
உயிரோடிருக்கிறாயே அதுவே நீ செய்த அதிர்ஷ்டம்!
திடீரென, எஃகினும் வலிய வலைப்பின்னல் காவலனை சுற்றிப்பட-
அதே சமயம் வெளியே நின்றிருந்த கில்மோர், தம் துருப்புகளுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்த வேளையில்-
மெதுவாய் முன்னேறுங்கள்! கோட்டைக் காவலர்கள் அவசரவழி கேட் வழியே உள்ளே செல்ல அனுமதிப்பர்-
கில்மோர்! ரேடியோத் தகவல்! மூழ்கிய நீர்மூழ்கியை மேலே கொண்டு வந்தாயிற்றாம்- உள்ளே ஸ்பைடர் இல்லையாம்!


கில்மோரின் முகம் வெளிறியது-!
எமர்ஜென்சி! சிறைக்கதவைத் தகர்த்து உள்ளே புகவும்! ஸ்பைடர் உயிருடன் இருக்கிறன்-ஒருவேளை உள்ளே கூட இருக்கலாம். உயிரைப் பணயம் வைத்தாவது அவனைப்பிடியுங்கள்!


ஸ்பைடரின் காதிலும் அவ்வாணை கேட்டது-
ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய உத்தரவு இது கில்மோர் ஆபத்தானவன். உன்னைச் சர்யானபடி கவனித்தாக வேண்டும். முதலில் கதவு திறக்கப்படட்டும்!


பிரதான வாசல் திறக்கிறது. ஸ்பைடர் அதன் இயக்கத்தைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டான் போலும்!
சாவலர்களே- கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசுங்கள்! உள்ளே புகுந்து ஸ்பைடரை வளைத்துப் பிடியுங்கள்!


கைதிகள் அதிகம் தப்பியிருக்க முடியாது! ஆனால் நமது குறி எல்லாம் ஸ்பைடருக்குத்தான்!
எப்படியோ மொத்தமாகத் தப்பிச் செல்லும் ஸ்பைடரின் திட்டத்தில் மண் விழுந்து விட்டது!
அதே சமயம் மேலிருந்தவாறு கவனித்துக் கொண்டிருந்-தான் ஸ்பைடர்-
கில்மோர், பீட்டர் இருவருமே மகா புத்திசாலிகள் தான்! ஆனாலும் எனக்குத் தேவையான இருவர் சிறையிலிருந்து தப்புவதைத் தடுக்க இயலாது அவர்களால்!
ஸ்பைடர் கை அசைக்கவும், ஜெட் உடுப்பு அணிந்து இருந்த ரெல்ஹாமும் ஆர்டினியும் 'வர்'ரென மேலே கிளம்பினர்-
நமக்காக ஸ்பைடரின் ஹெலி-காப்டர் ஒன்று காத்திருக்கும் புரபஸர்!
இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற குற்றங்களை நிகழ்த்த திறமையான சகாக்கள் இருவர் எனக்குக் கிடைத்து விட்டனர்!
அடுத்து தன் வலைத்-துப்பாக்கியின் விசை-யைத் தட்டினான்-
இனி கில்மோர், பீட்டர் இருவரையும் கவனிப்போம்! அவர்களைக் கொண்டே நான் தப்பிச் சென்றால் அது நல்ல வேடிக்கையாயிருக்கும்- முட்டாள்களாக்கி பழி தீர்ப்பது என்பது


ஒவ்வொரு கட்டிடப் பகுதியாக தேடுங்கள்!
ஹே- மேலே ஸ்பைடர்!
பிரயோஜனமில்லை! துப்பாக்கியை உள்ளே வை கில்மோர்!
இப்போது ம பக்கவாயு பிரயோகம்- ஆபத்தற்றது நண்பர்களே! உங்கள் தொல்லை சிறிது நேரம் இல்லாமல் இருப்பதற்காக!
அடுத்த சில விநாடிகளில்-
என் கையை வலை சுற்றிக் கொண்-டதே- ஆஆஆ!
கில்மோர், டிரைவர் சீட்டில் அமர்ந்து வண்டியை ஸ்டார்ட் செய்! மறுத்-தாயோ வீணாக உன் நண்பனை இழப்பாய்!



பாலத்தைக் கடந்து ஓட்டிச்செல்! இன்று என உத்தரவுக்கு நீ அடி-பணிவதுபோல் இந்த உலகமே ஒரு நாள் அடிபணியும்!
காவலர்களுக்கு துளியும் சந்தேகம் ஏற்படவில்லை-
கில்மோரும், பீட்டரும் தலைமையகத்திற்குத் திரும்புகிறார்கள்!
காரின் பின்பகுதியில் மறைந்திருந்தான் ஸ்பைடர்-
ஸ்பைடரைத் தேடும் பணியை கைவிட்டுவிட்டனர் போலும்!
எதிர்ப்புக் காட்டாதவரை தேவையற்ற மரணங்-களைத் தவிர்க்கலாம் கில்மோர்!
ஆனால் ஸ்பைடர் அறியா வண்ணம் ரேடியோ டிரான்ஸ் மீட்டரின் சுவிட்சைத் தட்டி விட்டான் கில்மோர்-
எவ்வளவு வேகத்தில் பாலத்தைக் கடக்க வேண்டும் ஸ்பைடர்? சொன்னபடி கேட்காவிட்டால் நண்பனைக் கொன்று விடுவாயே என்று பயமாயிருக்கிறது!
பேசும் ஒவ்வொரு வார்த்தையும் போலீஸ் தலைமையகத்தில் தெளிவாய் கேட்கப்படும்-கில்மோர் மகா சாமர்த்தியசாலி!


போலீஸ் தலைமையகத்தில்-
ரோந்துக் கார்கள் அனைத்திற்கும் தரப்படும் தகவல் இது- ஸ்பைடர் நமது 'பால்கன் 3' என்ற காரில் உள்ளான்- அவ்வண்டி ஸில்வர் கேட் பாலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. நம் துப்பறிவாளர்கள் இருவரையும் பணயக் கைதிகளாக கொண்டு செல்கிறான்!


ஸ்பைடருடன் நெருக்கமாய்ச் செல்லவும்! கில்மோரும், பீட்டரும் அவனை மடக்கு வதற்கு உதவியாயிருக்கும்!


பாலத்தை அடைத்து விட்டனர்! பொறிவைத்து பிடிக்கும் திட்டம் இது! கில்மோர், இதற்கு நீ பதில் சொல்லியே ஆகவேண்டும்!
நன்றாகப் பற்றிக்கொள் பீட்டர்! ஸ்பைடர் தன் மயக்க வாயு துப்பாக்கியை பயன்படுத்துமுன் காரை மோதச் செய்யப் போகிறேன்!


கேட்டின்மீது முழுவேகத்தில் சென்று மோத நிலைதடுமாறி சாய்ந்தான் ஸ்பைடர்-
டம்- டமால்
வண்டி தீப்பற்றிக் கொண்டது! தீயணைப்புக் கருவியை எடுத்து வாருங்கள் சீக்கிரம்- ஸ்பைடரும் நமது ஆட்கள் இருவரும் உள்ளே இருக்கின்றனர்!
மறுகணம்-
தீ இல்லை- வெறும் புகை தான்!
எங்களுக்கு ஒன்றுமில்லை- பின் சீட்டில் இருக்கும ஸ்பைடரைக் கைப்பறறுங்கள்!
ஸார்- ஆள் இல்லை!



தான் உண்டாக்கிய புகைப்படலத்தினூடே பிறர் அறியா வண்ணம் தப்பி வந்த ஸ்பைடர்
எனது வலைத்துப்பாக்கி ஏற்படுத்தித் தந்த ஒரு நூலிழையில் இங்கு வந்துவிட்டேன! கில்மோரை குறைவாக எடை போட்டது எனனுடைய முட்டாள்தனம்!
புகைமண்டலம் ஒரு ஏமாற்றுவேலை! தப்பிவிட்டான் ஸ்பைடர்! ஆனுல் இந்த பாலத்தைவிட்டு எங்கும் செனறிருக்க முடியாது- பரவலாய்த் தேடுங்கள்!
மேலே- அதோ உத்தரத்தைப் பாருங்கள்! சுட்டு வீழ்த்துவது கடைசி முயற்சியாக இருக்கட்டும்- அவன் நமக்கு உயிருடன் வேண்டும்!
அவன் அறிந்திருக்கும் விஷயங்கள் நமக்குத் தெரிந்தாக வேண்டும்!
வெகு உயரமான பாலத்தின் தாங்குதூண் வழியே மேலே ஏறினர் கில்மோரும் பீட்டரும்
நாங்கள் அவனை இங்கே தேடுகிறோம்-
பாலத்தைவிட்டு வெளியேறிவிடாமல் நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்!


அதோ போகிறான்! தன் வலைத் துப்பாக்கியைப் பயன்படுத்திப் பறக்கிறான்!
போலீஸ் மிக நெருங்கி விட்டது. ஆனால் எல்லோருமே முட்டாள்கள்! இந்த ஸ்பைடரை பிடிக்க எவராலும் முடியாது!
பாலத்தின் கீழே இருக்கக் கூடும்! மந்திரவாதி போல் நினைத்த நேரத்தில் மாயமாய் மறைந்து கொள்கிறான்!
உல்லாசப் படகு ஒன்று பாலத்தின் கீழாக கடந்து போய்க் கொண்டிருந்தது.
சரியான சந்தர்ப்பம்!
யாருமே என்னைக் கவனிக்கவில்லை!


காட்டன் திரும்பிய வேளையில்
இந்த வாயு மரணத்தை விளைவிக்கும்! ஆனால் யாரையும் கொல்லும் மனநிலை இல்லை எனக்கு- அதனால் அதன் வீரியம் சிறிது கட்டுப்படுத்தப் பட்டிருக்கறது!
ஏ- யார் நீ? ஆஆஆ!
கடற்கரை நோக்கித் திருப்புவோம்! போலீஸ் தொல்லை நீங்கியது- கில்மோரும் அவனது சகாவும் மேலதிகாரிகளிடம் நிறையவே விளக்கம் கூற வேண்டியிருக்கும்!
திரும்பவும் தன் எதிரிகளைப் பற்றி ஸ்பைடர் குறைந்து எடை போட்டது தவறாகி விட்டது-
ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது- அந்த நீராவிப் படகு தன் வழக்கமான பாதையை விட்டு விலகிச் செல்கிறது ஸ்பைடர் அதனை வசப்படுத்தி இருக்க வேண்டும்!


கில்மோர் பேசுகிறேன்- அதோ தொலைவில் செல்லும்
நீராவிப் படகினை ஒட்டி காரினைச் செலுத்துங்கள்!
ஸ்பைடர் அதில் பயணம் செய்கிறான். தரையிறங்க
முயற்சிப் பான் தேவை ஏற்பட்டால் ஒழிய
சுட வேண்டாம்!
இனி என்ன அதிசயங்கள்
செய்தாலும் அவன்
தப்ப முடியாது!


கரை நோக்கி தன் வலைத் துப்பாக்கியால்
பாலம் அமைத்தான் ஸ்பைடர்.
அதோ
ஸ்பைடர்!
ஸ்பைடர் என்ற தனி மனிதனைப் பிடிக்க ஒரு
பெரும் போலீஸ் பட்டாளமே அல்லவா
பின் தொடர்ந்து வருகிறது!


ரஸ்தாவின் குறுக்காக வலையினை தயார் செய்தான்-
ஓ- வண்டியை நிறுத்து! ராட்சஸ சிலந்தி வலையை உருவாக்கியிருக்கிறுன்!
ஊடுருவிச் செல்வோம்!
POLICE


சக்கரங்கள் பெரிதாய் கிறீச்சிட்டன-
பிரமாதமாய் வண்டி ஓட்டுகிறீர்கள்! திறமையற்றோர்க்கு மட்டுமே காயம் உண்டாயிருக்கும் ஹா-ஹா-ஹா!


இந்நூற்றாண்டின் மிகப்பெரும் குற்றத்தினை நிகழ்த்துவதே என் நோக்கம்! அதனைத் தடுத்து நிறுத்துதல் என்பது உங்களால் இயலாத காரியம்! நாம் திரும்பவும் டொராடோ மாகாண பொருட்-காட்சியில் சந்திப்போம்!


கண்களை குருடாக்கும் புகையைப் படரவிட்டுக் கிளம்பினான் ஸ்பைடர்-
வலைப்பின்னலைத் தகர்த்து பயணத்தைத் தொடர நெடுநேரம் பிடிக்கும்!
புத்திசாலித்தனமான பிசாசுப் பயல் இவன்!
தன் தலைமையகம் போய்ச் சேர்ந்தான் ஸ்பைடர்-
ராய் ஆர்டினியும், புரஃபஸர் பெல்ஹாமும் ஏற்கனவே வந்து சேர்ந்திருப்பார்கள். டொர்ரடோ பொருட்-காட்சியில்தான் நமது தொழில் திறமையை வெளிப்படுத்தப்போகும் முதலாவது இடம்!
45



ஆர்டினி ஒரு வெடி நிபுணன். புரபஸர் பெல்ஹாம் கிரிமினல் மூளை கொண்ட விஞ்ஞானி.
எந்த அளவு முன்னேற்றம் உள்ளது புரபஸர்? தவறுக்கு இங்கே இட-மில்லை என்பதை மட்டும் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்!
ஸ்பைடருக்கு அடுத்தபடியான திறமைசாலி நான்தான் ஆர்டினி. வெற்றிக்கு உத்திர-வாதம் தர முடியும்!




நீங்கள் இருவருமே வெற்றி காண்பீர்கள்! ஒரு மில்லியன் டாலர் தொகையை டொராடோ பொருட்காட்சியில் கொள்ளையிடத் தீர்மானித்திருக்கிறேன். தோல்வி ஏற்படுமானால் உங்கள் எதிர்காலம் விரும்பத் தகாததாய் இருக்கும் என்பது நிச்சயம். அதனால் மிகுந்த எச்சரிக்கை அதிகம்!


உலகெங்கும் உள்ள செல்வந்தர்கள் பார்த்துச் செல்லும் அற்புதமான பொருட்காட்சிதான் டொராடோ. வேடிக்கை மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் மட்டுமின்றி விலைமதிப்பில்லா அரிய பொருட்களைக் கொண்ட காட்சி அரங்குகளும் நிறையவே உண்டு அங்கே-
ஸ்பைடர் நிஜத்துக்கே இங்கே கொள்ளையடிக்கப் போவதாகக் கூறினானா, கில்மோர்? அவனால் முடியுமா?
முயற்சித்துப் பார்க்கக் கூடும்! அரிய வைரம் காட்சிப் பொருளாய்க் கொண்ட அரங்கம் ஒன்று உண்டு இங்கே!
சாதாரண உடுப்பணிந்த உளவாளிகள் பலர் எல்லா இடங்களிலும் பரவி உள்ளனர். குறிதவறாது சுடும் ஆயிரம் போலீஸாரும் கூட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். எந்த ஒரு சந்தேகத்திற்கிடமான சலனத்தையும் கண்டுபிடிக்க டி.வி. கேமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன-
ஆனாலும் உன் குரலில் கொஞ்சமும் உற்சாகம் இல்லையே-
அதே சமயம்-
திரும்பிய பக்கமெல்லாம் போலீஸ் நிறுத்தப்பட்டிருக்கிறது புரபஸர்- வாகனங்கள் அனைத்தும் அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன!
ஸ்பைடர் வருவதற்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் தான் உள்ளன!
திடீரென வானில் விமானம் ஒன்று தென்பட்டது. அதிலிருந்து உருவம் ஒன்று கீழே குதித்தது-
ஸ்பைடர்! காவலை உஷார்ப் படுத்துங்கள்-காவலர்கள் அனைவரையும் ஒரே இலக்காய் அவனை நோக்கிச் சுடுங்கள்!


இது புதுமையானதொரு சுடும் பயிற்சி-பீதி கொள்ள வேண்டாம் தோழர்களே!
இதோ-கொக்கைச் சுடுவது போல் சுட்டு வீழ்த்துகிறேன்!
அடுத்து - காதைச் செவிடாக்கும் பலத்த ஓசையுடன் அவ்வுருவம் வெடித்தது!
டூம்!
அப்பப்பா! என்ன வெளிச்சம்!
ஆ ஆ ஆ-என் கண்!
அதே சமயம்-அருகாமையில்-
பெல்ஹாம் உருவாக்கிய என் டம்மி உருவம் சரியாகவே வேலை செய்தது! இனித் தொழிலைக் கவனிப்போம்-


வாயுக் கவசம் ஒன்றை முகத்தில் மாட்டிக் கொண்ட ஸ்பைடர்-
இக்கட்டிடத்தின் சிலைகளோடு சிலையாய் நிற்கும் என்னைக் கவனிக்க வாய்ப்பில்லை. அடுத்த அதிர்ச்சியைக் கொடுப்போம்!


குழப்பமுற்ற பார்வையாளர்கள் கவனியாத நிலையில் நீர்த் தடாகத்தினை நோக்கி ஸ்பைடர் சுட்ட துப்பாக்கி ரவைகள் வழக்கத்திற்கு மாறாய் மெதுவாய்க் கரைந்து நீரோடு கலந்தன-
ஏதோ வெடி விளையாட்டு போலும்!
பட்! பட்!! பட்!!!
இதுபோல் பயமுறுத்தும் வேடிக்கைகளை தடைசெய்யுமாறு புகார் செய்யப் போகிறேன்!



வேன் டிரைவர்களாக வேடமிட்டிருந்த ஆர்டினியும், பெல்ஹாமும் சற்றுத் தொலைவில் திட்டத்தின் அடுத்த கட்டத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்-
கவசத்தைத் தயாராய் வைத்துக் கொள். செயல்படும் நேரம் வந்துவிட்டது-
கூலர் பானத்தில் கலந்த பொடி ... வேலை செய்யுமல்லவா- தவறு ஏதும் நேராதே?
சில நிமிடங்களுக்குப் பின்னர் குளிர்பானக் கடை ஒன்றில் வித்தியாசமான காட்சியைக் கண்ட ... பீட்டரும் -
அங்கே பார்-பாட்டிலைத் திறந்து கொடுப்பவனுக்கு என்னுயிற்று? தடுமாறிக் கொண்டிருக்கிறுனே!
கீழே நிற்கும் வாடிக்கையாளர்களின் நிலையும் அதுதான்!
சுற்றி நின்ற கூட்டம் நிதானமற்ற நிலையில் காணப்பட்டது-
எ-எதனுல் இப்படி?
பானத்தில் ஏதோ போதைப் பொருள் கலந்திருக்கிறது! ஸ்பைடரின் கைவரிசைதான் இது!
50


அதே சமயம்
தடாகத்திலிருந்து புகைச் சுருள் வளையம் வளையமாய்க் கிளம்பி நாலா திசையிலும் பரவியது-
ஆபத்தற்ற வாயுதான் - ஆனால் வீரியம் மிக்கது! விரைவில் பொருட் காட்சியில் உள்ள அனைவரும் செய லற்றுப் போவர்-
ராட்சத சாற்றுடி ஒன்றை நோக்கிப் பறந்தான் ஸ்பைடர்-
புரபஸர் தயாரித்த விசேடமான மருந்துப் பொடி இந்தக் காற்றுடி வழியே விசிறப் பட்டு நன்கு பரவும்!
ஆ ஆ ஆ!
என்னுயிற்று?
எ-எனக்கு-
மயக்கம்-


காற்றுடியை மெதுவாய் நான்கு திசைகளை நோக்கியும் திருப்பினான் ஸ்பைடர்-
இன்னும் ஒரு நிமிடத்தில் அனைவருமே மயங்கி விழுந்து விடுவர்-


கில்மோர் பீட்டர் இருவருங்கூட அதற்குத் தப்ப முடியவில்லை-
இடையூறு இல்லாமல் உலகின் மாபெரும் திருட்டை இலகுவாய்ச் செய்து முடிக்கப் போகிறேன்!
எ-என்னால்-நகர-முடியவில்லை'
அஹ்ஹ்'


என் ரேடியோத் தகவல் பெறும் ஆர்டினியும், பெல்ஹாமும் விரைந்து செயல்பட்டாக வேண்டும்!


உத்தரவுபெற்ற சகாக்கள் இருவரும் செயல்படத் துவங்கினர்-
போலீஸ் வாகனங்கள் அனைத்தையும் பழுதாக்கி வைப்பது உன் பணி, புரபஸர்-ஆனால் ஒரே ஒரு கார் நாம் தப்பிப்பதற்காக நல்ல நிலையில் இருக்கட்டும்!
எனக்கு எதையும் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை, ஆர்டினி.
காரியம் முடிந்து கிளம்புவதற்கு வசதியான இடத்தில் வண்டியை நிறுத்தி வைப்போம்-
நீ படித்த அறிவாளி-உனக்கு யோசனை கூறும் அருகதை எனக்குக் கிடையாது-
வைர ஆபரணங்களுக்கான காட்சி அரங்கில்,
ஆர்டினி, நீ பெட்டகத்தைத் திற! பெல்ஹாம்,, நீ இதோ இருக்கும் குண்டு துளைக்காத கண்ணாடிப் பெட்டியை துளைக்க வழிசெய்-நாம் சிறந்த வைரங்களை மட்டும் எடுத்துச் செல்லப் போகிறோம்!
53



இந்த அமிலம் எந்தக் கண்ணாடியையும் அரிக்கக் கூடியது-
அறிவியல் மேதை நீ! நேர்மையான வாழ்க்கையில் உனக்கு ஈடுபாடு இல்லை என்பது மிகவும் அதிர்ஷ்டகரமான சமாச்சாரம், புரபஸர்-
தூங்கும் இந்தக் காவலன் மேல் துணியைப் போர்த்தி இவனுடைய சீருடை அழுக்கடையாமல் செய்தாகி விட்டது! ஹா! ஹா!
திடீரென மின்சார ஒளிவெள்ளம்-
ஹா! ப்யூஸ் போய் விட்டது! குருட்டு முட்டாளே, உன் அமிலம் மின் வயரை அரித்திருக்கிறது!
54


கம்ப்யூட்டர் மனிதன்!
அக்கு பங்க்சர் முறையில், மின்னணு
ஊசிகள் மூலம் பாட்டரியை சார்ஜ்
செய்வதுபோல்- மனிதனின் வீரி-
யத்தை பலமடங்கு பெருக்கும் அந்த
சாதனை, இந்த விஞ்ஞான யுகத்தில்
என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்
என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு-



பிரிட்டிஷ் இரகசிய உளவுத் துறை தலைமையகம்- உச்சகட்ட சோதனை இன்று தொடங்குவதாக ஏற்பாடு. சோதனைக்கு உட்படுந் நபர்- இரகசிய உளவாளி 'டெவில்'-
ஆடைகளை களைந்து விட்டு வந்து நில்- டெவில்!




ரெடியா?
எஸ்- ஸார்!
விசித்திரமானதொரு கண்ணாடிக் கூண்டிற்குள் நின்றான் டெவில். அவனைச் சுற்றிலும் விசேஷ மின்னணு ஊசிகள் தயாராகயிருந்தன-


ஜிர்ர்ர்ர்ச்
மின்னணு ஊசிகள் உடம்பினுள் செருகுகின்றன!


இதோ-
தேர்ந்தெடுக்கப்பட்ட நரம்பு முனைகளை மின்னணு ஊசிகள் தாக்கியதும் அதீத மின்சாரம் டெவிலின் உடலில் பாய்ந்தது.

ஆறு மாத காலம் நீடித்த அந்த முயற்சியின் போது நாளுக்கு நாள் கூடுதல் வீரியம் கொண்ட மின்சாரம் அந்த ஊசிகள் மூலமாக டெவிலின் உடம்பினுள் செலுத்தப்பட்டது-




மின்சாரம் உச்சமாக்கப் படட்டும்!


உளவுப் படைத் தலைவர் இறுக்கமான முகத்துடன் உத்தரவிட்டார்
அடுத்த கட்டம்- மூளை சர்ஜரி! டெவிலை தயார் செய்யவும்!


தலைசிறந்த சர்ஜன் குழு ஒன்று பதினாறு மணி நேரம் கடுமையானதொரு முயற்சியில் ஈடுபட்டது-
கம்ப்யூட்டர் அமைப்பை டெவிலின் மண்டையோட்டிலேயே பதித்து விட்டோம்!
மனோ வேக செயல் திறன் கொண்ட கம்ப்யூட்டர், சிந்திக்கும் ஆற்றலுடைய மனித மூளையோடு இணைந்து இயங்கும்போது, எந்த ஒரு கடினமான பிரச்சனைக்கும் மின்னல் வேகத்தில் சரியான முடிவெடுக்க முடியும்!
வெற்றிப் பெருமிதம் மிளிர்ந்தது அவர் முகத்தில்-
நம் நீண்டகால ஆராய்ச்சி முதன் முறையாக நடைமுறையில் பலனளிக்கப்போகிறது! டெவிலின் மூலமாக!


உலகின் முதல் கம்ப்யூட்டர் மனிதன் ரெடி! அக்குபங்ச்சர் முறை-
யில் அளவான மின்சாரத்தைப் பாய்ச்சியதனல் டெவிலின் ஆற்-
றல் பன்மடங்கு பெருகியிருந்தது! அத்தோடு மட்டுமல்லாமல்
அவனது மூளைக்கு ஒத்தாசை புரிய, கம்ப்யூட்டர் அமைப்பு ஒன்-
றும் சேர்க்கப்பட்டிருந்ததால் எந்த விஷயத்தையும் நொடியில்
தீர்க்கக்கூடிய மனேசக்தி அவனிடம் உருவாகியிருந்தது-


பின்னர்.
உன் விசேட ஆற்றலை பலகட்ட சோதனைக்கு உட்படுத்தத்தான் எண்ணியிருந்தேன். ஆனால் அதற்குள் அவசரப் பணி ஒன்று வந்து விட்டது!


காட்டெஸ்டேல் விமான யுத்த தளத்தை பயங்கரவாதிகள் தாக்கி கைப்பற்றியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது!


சாதாரணமாக, இம்மாதிரியான சூழ்-நிலையில் பயங்கரவாதிகளை முறி-யடிக்க ஒரு முழு அதிரடிப் படையை அனுப்புவது வழக்கம். ஆனால் இம்-முறை நாங்கள் உன்னை அனுப்பு-கிறோம் தன்னந் தனியாக!


தளத்தில் இருந்தவர்களை பயங்கரவாதிகள் ஈவிரக்கமின்றி சுட்டுத் தள்ளி விட்டார்கள்- நியூக்ளியர் சக்தியால்கூட பிளக்கமுடியாத கதவின் பின்னே பத்திரமாக பதுங்கிக் கொண்டிருக்கும் எதிரிகளை நெருங்க வழியேயில்லை!
என் சிறப்பாற்றலை நடைமுறையில் சோதித்தறிய ஓர் அரிய வாய்ப்பு!
டெவில் அசுர வேகத்தில் ஓடத் தொடங்கிய போது கம்ப்யூட்டர் சர்க்யூட் தேவையான பயனுள்ள தகவல்களை தந்தது.
வேகம்: மணிக்கு 70 மைல்
தேவையான வீரியம் : 42%
'தாக்குதல் மையம் கொள்ள வேண்டிய இடம்: கதவின் மத்திய புள்ளியிலிருந்து 6 5 மி. மீட்டரில்


கம்ப்யூட்டர் பொய் சொல்லாது என்பார்கள். 42 சதவிகித சக்தியா? ஓ.கே. இதோ!


அட- ஒரே உதையில் ஏகப்பட்ட பேரை தீர்த்துக் கட்டி விட்டேன் போலிருக்கிறதே!
டம் டமார்!
என் வீரியம் பலமடங்காகி விட்டிருப்பது நம்பகமாகத் தெரிகிறது!
கும்!
ஆனால்- எந்த அளவுக்கு?
ஊஹூம் · கவனம் சிதறக்கூடாது - 13 விநாடிகள் வீணடிக்கப்பட்டு விட்டன. தொடர்ந்து இறுதிகட்டத்தை நோக்கி முன்னேறவும்!


எதிரிகளைப் பந்தாடிக் கொண் டிருக்கும் சமயம், பயங்கரவாதி களின் தலைவன் மோட்டார்-பைக்கில் தப்பிச் சென்றான்!
அவனை நான் பிடித்து விட முடியுமா?
முடியும் அந்த வாகனத்தின் உச்ச வேகம் மணிக்கு 160 மைல் டெவி லின் உச்ச வேகம் மணிக்கு 120 மைல். 3.3 செகண்டுகளுக்குள் பிடித்தால்தான் உண்டு!


அதாவது அவன் முழு வேகம் பெறுமுன்!
வெறி நாய் ஒன்று என்னைத் துரத்தி வருவதான கற்பனையில் இதோ.
ஓடுகிறேன்- என் சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டி!


ராட்சஸ வேகத்தில் ஓடி வந்து பாய்ந்தான் டெவில்.
ஆவ்வ்!


அங்கே உடனே வந்து
சேர்ந்தது ஒரு
ஆம்புலன்ஸ்.


கணிப்பு: மோசமான எலும்பு முறிவு-கள். ரத்த நாளங்களில் துண்டிப்பு உயிர் நாடியான அவயங்களில் சேதம்!
டெவிலுக்கு: லேசான சிராய்ப்பு மட்டுமே!
விளைவு: மரணம் நிச்சயம்!
சுருக்கமாக சொல்வதானல் நான் வந்த காரியம் முழு வெற்றி பெற்று விட்டது!
இங்கேதான் நீ தப்புக்கணக்கு போடு-கிருய் தம்பி- எங்களுடைய சூழ்ச்-சிக்கு நீ பலியாகி விட்டாய்!
உன் கவனத்தை திசை திருப்பவே இந்த நாடகம்- எங்களுடைய உண்மையான நோக்கத்தை நீ தெரிந்து கொள்ள விரும்பினல்...


...மேலே அண்ணாந்து பார்!
அதோ- மேலே பறக்கும் அந்த வல்கன் யுத்த விமானம் படுபயங்கரமான விஷ-வாயுவை சுமந்து சென்று கொண்டு இருக்கிறது. அதை என் மற்ற சகாக்-கள் ஹை ஜாக் பண்ணி வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்!



பயலுக்கு உயிர் பிரிந்துவிட்டது டெவில்! விஷவாயுவை சுமந்து செல்லும் அந்த வல்கன் விமானத்தை அப்படியே சுட்டுத் தள்ளி விடுவது சுலபம். ஆனல் விளைவு விபரீதமாக இருக்கும்!
எனவே வேருெரு யுக்தியைத்தான் கையாள வேண்டும் நாம்!
ஒரு R.A.F. நிம்ராட் விமானம் வல்கனை விரட்டிப் பிடித்து விடும். என் யோசனை இதுதான்!
நீ விவரிக்கும் முயற்சியில் மரணபாயம் உள்ளது!
ஆபத்துக்களை வலிய வரவேற்பதுதானே என் பணியின் சிறப்பு அம்சம்!
சில நிமிடங்களுக்குப்பின் டெவிலை சுமந்து கொண்டு ஜிவ்வென்று மேலெழும்பியது ஒரு நிம்ராட் வகை விமானம்.



சில நிமிடங்களுக்குப் பின்-
அதோ- நெருங்கி விட்டோம்! ஆனல்-
ஆனல்...வந்து என்ற இழுபறி வார்த்தைகளுக்கெல்லாம் இடமே கிடையாது இப்போது! வல்கனுக்கு நேர் மேலே 200 அடி உயரத்திற்கு கொண்டுபோ விமானத்தை! நான் குண்டு வீசும் திறப்பு உள்ள பகுதிக்கு செல்கிறேன்!
விரைவிலேயே வல்கனுக்கு நேர் மேலே வந்து விட்டது நிம்ராட்-
குண்டுவீசும் திறப்பின் கதவுகள் இதோ திறக்கப் பட்டு விட்டன!
உங்களுடைய முயற்சி வெற்றி பெற என் நல்வாழ்த்துக்கள்!



டெவில் கீழே பாய்ந்து இறங்கிய வேளையில் கம்ப்யூட்டர் வேகமாக புள்ளி விவரங்களை கொடுத்தது.
வல்கனின் வேகம்: 470 Knots
சென்றடைய பிடிக்கும் கால அவகாசம்: 6.7 செகண்டுகள்
அங்கே கவனி. யாரோ ஒரு ஆசாமியை அனுப்பி வைத்திருக்கிறார்கள்!
தவிர்த்துக் கொள்ள முயற்சியை மேற்கொள்- விமானத்தை சுழற்றி, விலக்கி ஓட்டு!


டெவில் வல்கன் மீது வந்து இறங்கியதும் விமானம் பல முறை உருண்டது-
விரல்களில் பற்றிக் கொள்ள ஓட்டை போடுவது ஒன்றும்கஷ்டமான காரிய மில்லை-அசுர பலம் கொண்ட எனக்கு!


மண்டேயாட்டிலிருந்த கம்ப்யூட்டர் தொடர்ந்து உத்தரவுகளை டெவிலின் மூளைக்கு அனுப்பிக் கொண்டிருந்தது!
தொணத் தொணக்காமல் பேசாமல் இரு கம்ப்யூட்டர்!
6 மி. மீ. கனமுள்ள உறுதி யான அலுமினிய சுற்றுச் சுவரை தகர்த்து உள்ளே புகு•


விரைவில்-
நம்பவே முடியவில்லை! அசுர பலம் இவனுக்கு! விமானத்தின் வயிற்றுப் பகுதியை கிழித்துக் கொண்டு வெகு சுலபமாக உள்ளே வந்து விட்டான்-


அவன் யாராக இருந்தாலும் இப்போது என் தோட்டா வுக்கு பலியாகப் போவது உறுதி! நம் முயற்சியை முறியடிக்க பாராலும் முடியாது!
முதல் இலக்கு சப் மிஷின் கன்னுடன் நிற்கிறான்! தீர்த்துக்கட்டு-



ஆவ்வ்!
முதல் இலக்கின் மண்டையோடு சிதறி விட்டது முடிவு மரணம்-




வாயை முடித் தொலே கமப்யூட்டர்! என் வேலேயை நானே செய்து கொள்வேன்!
எண்ணி இருபதே வினாடிகள் தான்! அதற்குள் நீ அவசரமாக கற்றுக் கொள்ள வேண்டியது


ஆஆஆ!
இறக்கைகள் இன்றிப் பறக்க!


கெட்டது காரியம் - அவன் செலுத்திய தோட்டாக்களில் ஒன்று, ஒரு விஷ வாயு சிலிண்டரை துளையிட்டு விட்டது! உடனடியாக கண்ட்ரோலுக்கு சொல்ல வேண்டும்!


தலைகுப்புற பாய்கிறது விமானம் - இலண்டனின் மையப் பகுதியை நோக்கி! எப்படியாவது மீண்டும் விமானத்தை மேலே ஏற்றி விபரீதத்தை தவிர்க்க வேண்டும்!


கண்ட்ரோல் விசைகள் மீது ஆதிக்கம் செலுத்த முயன்றான் டெவில்-
என்ன ஆயிற்று எனக்கு?
விநோதமான உருவங்கள் எங்கேயிருந்து வந்து முளைத்தன - என் கண் எதிரே?



உருவங்கள் நிஜமல்ல- திரும்பச் சொல்கிறேன்- நிஜமல்ல-
தொலைந்து போங்கள்-சைத்தான் களே-என்னை நிம்மதியாக சிந்திக்க விடுங்கள்!
வெளிப்பட்ட அந்த விஷவாயுவை வேறு யாரேனும் சாதாரண மானிடன் சுவாசித் திருந்தால் அக்கணமே மரணம் சம்பவித் திருக்கும்.அசுர பலம் படைத்த டெவிலின் மண்டைக் குள்ளே பிரமை தோற்றங்களை உருவாக்க மட்டுமே முடிந்தது அந்த விஷ வாயுவுக்கு!
அதையடுத்து-
விமானத்தை காப்பாற்றி அழிவை தவிர்க்க உன்னால் முடியாதடா-சுண்டைக்காய் பயலே!
இன்னொரு பயங்கரவாதி விமானத்தில் ஒளிந்திருந்த உண்மை டெவிலுக்கு தெரியாமல் போனது அதிர்ஷ்டமே!


பிரமையிலிருந்து முதலில் நான் விடுபட வேண்டும்! இவன் நிஜம்-என் முஷ்டி நிஜம்-என் முஷ்டி நிஜம்-
கும்!
அஹ்-
இடிபோல் இறங்கிய குத்து எதிரியை வீழ்த்தியது-


மூளை தெளிவாகி விட்டது-பிரமைகள் விலகி விட்டன-விமானம் இலண்டன் தெருக்களுக்கு மேலே பறந்து கொண்டிருக்கிறது. உடனடியாக எங்கேயாவது தரையிறங்க வேண்டிய நெருக்கடி!


வானோக்கி நின்றபல மாடிக் கட்டிடங்களுக்கிடையே எங்கேயும் மோதிவிடாமல் லாவகமாக பறந்தான் டெவில்
குறுக்கீடுகள் கவனம்- இடப் பக்கம் முப்பது டிகிரி சாயவும்-
ஊஹூம் அதிக நேரம் இப்படியே தாக்குப் பிடிக்க முடியாது- தரையிறங்கியாக வேண்டும்- அவசரம்!
ஜோரரரர!


அருகாமையிலுள்ள ஒரே எமர்ஜென்சி இறங்குமிடம் தேம்ஸ் சதுப்பு நிலம்தான்! 500 மீட்டர் தொலைவில்.
ஆம்-அதைவிட வசதி யான இடம் அருகே வேறு எதுவுமே கிடையாது!




 டெவிலின் அடுத்த சாகஸம் விரைவில்.

முற்றும்.


தூக்க வாயுவை பொருட்காட்சி திடல் முழுக்க பரப்பிக் கொண்டிருந்த ராட்சத காற்றுடிகளின் இயக்கம் நின்றது!
பெல்ஹாம்! வாயுவினால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் உணர்வுபெற்று விடுவார்கள்! கொள்ளைப் பொருட்களை மூட்டை கட்டிக் கொண்டு விரைவில் கிளம்புவோம்!
ஏற்கனவே உறை நிலையில் இருந்த மனிதர்கள் உணர்வு பெறத் துவங்கி விட்டனர்-
ஹே- என்ன நடந்தது?
நான் அயர்ந்து தூங்கி விட்டேனே?
நாம் சிறிது தாமதித்து விட்டோம்! தப்பிப்பதற்கென நாம் நிறுத்தி வைத்திருந்த காரைச் சுற்றி கூட்டம நிற்கிறது. எப்படி காரை கிளப்ப முடியும்?
போலீஸாரும் தூக்கத்திலிருந்து விழிக்கின்றனர்!



கில்மோரும், பீட்டரும் சுய நினைவு பெற்றனர்-
அதோ ஸ்பைடரும் அவனது கூட்டாளிகளும்! வைர அரங்கைவிட்டு வெளியேறுகின்றனர்- விடாதீர்கள் அவர்களை!
சுட வேண்டாம்- சுற்றி வளைத்துப் பிடியுங்கள்!
மிகுந்த எச்சரிக்கையுடன் தீட்டப்பட்ட திட்டங்கள் எதுவும் இவ்வளவு மோசமான முடிவைக் கண்டதில்லை-
கையில் ஒரு கோடி டாலர் மதிப்புள்ள பொருட்கள் அனுபவிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது- நம் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்! மீண்டும் சிறையில் சந்திப்போம் ஸ்பைடர்!
நம்பிக்கையை இழந்து விடாதே ஆர்டினி- நாம் இன்னும் பிடிபடவில்லை!
ஸ்பைடரின் வலைத்துப்பாக்கி போலீஸாரை சிறைப்படுத்தியது-
அறுக்க முடியவில்லையே இதை!
எஃகை விட வலுவாயிருக்கிறது!
ஆவ்!


ஸ்பைடர் தனது அடுத்த ஆயுதமான புகைத் திரையை உருவாக்கினான்-
புகைக் கண்ணாடியை மாட்டிக்கொள்ளுங்கள்! கூட்டத்திலிருந்து தப்பிச் செல்லுங்கள்! கார் ஒன்றை எடுத்துக் கொண்டு கிளம்புங்கள். போலீஸ் பின்தொடராவண்ணம் நான் பார்த்துக் கொள்கிறேன்!


மேல் நோக்கி தனது வலைப்பின்னலை அனுப்பினான் ஸ்பைடர்-
வைரங்கள் ஆர்டினி, பெல்ஹாம் வசம் உள்ளது. பிடிபட்டார்களென்றால் கிடைக்காது போய்விடும்!


கூட்டாளிகளுடன் தப்புவதற்கென ஸ்பைடர் நிறுத்தி வைத்திருந்த காரை துப்பறிவாளர்கள் எடுத்துக் கொண்டனர்-
அவர்களுக்கு இப்போது கார் தேவை- கார்பார்க்கிங் இடத்திற்குத்தான் போயிருப்பார்கள்!
POLICE


மேலே நின்றவாறு நடப்பதைக் கவனித்துக்
கொண்டிருந்த ஸ்பைடர்-
முட்டாள்கள்-வெறும் புகையினூடே சுட்டு துப்பாக்கிக் குண்டுகளை வீணடிக்கிறார்கள்! ஆர்டினி, பெல்ஹாமுடன் ரேடியோத் தொடர்பு கொள்ள வேண்டும்- இப்போது கார் ஒன்று தேவை!
அதோ இருவரும் வருகிறார்கள்-கையில் கொள்ளைப் பொருளும் இருக்கிறது! ஆர்டினி இந்தப் போலீஸ் வண்டியில் ஏறி ஓட்டுவான்!
அடுத்த சில நிமிடங்களில்-
அந்த போலீஸ்காரரை கவனி- ஸ்பைடர் உள்ளே இருக்கிறான்!
டயரை நோக்கிச் சுடு! நாம் பின் தொடர்வதை அவர்கள் சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.


ஸ்பைடர், நிறுத்து! உன் ஏமாற்று வேலை இம்முறை பலிக்காது! வலைப் பின்னலால் தடுத்து நிறுத்த முடியாது!
இதோ ஊடுருவி விட்டோம்!
புரபஸர் பெல்ஹாம் மனதில் திடீர் பீதி-நடுநடுங்கியவனாய்-
ஸ்பைடர், அவர்கள் ஓட்டி வரும் கார்தான் பழுதில்லாதது. நா- நாம் இருக்கும் இந்தக் கார் பழுதானது!
அறிவுகெட்ட முட்டாளே!
அதற்குள் வண்டி கட்டுப்பாடு இழந்து பாதையை விட்டு விலகியது-
ஆ ஆ ஆ!
அடக்கடவுளே! வண்டிக்கு ஏதோ ஆகி விட்டது!


அதல பாளத்திற்குள் விழுந்து விட்டதே-


விபத்துக்குள்ளான வண்டி தீப்பிடித்து எரியலாயிற்று-
தொலைந்தார்கள்! பெட்ரோல் டாங்க் தீப்பற்றி எரிகிறது! காப்பாற்ற வழியே இல்லை!
கொஞ்சமும் நம்பமுடியவில்லை- இமைப் பொழுதில் நடந்த எதிர்பாராத விபத்து இது-







வெளியீடு எண் : 8.
பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக ''ஜூனியர் லயன் காமிக்ஸ்'' வெளியிடுபவரும் ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ.எண்: 374, சிவகாசி 626 123.
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி. போன்: 21159.

அடுத்த வெளியீடு!



விரூபனுக்கு ஒரு ஷெரீப்!
ஜூனியர்
லயன் காமிக்ஸ்
முழு வண்ணக் கதை
ரூ. 2-50
அக்டோபர் 1-ல் கிடைக்கும்!
சூப்பர் ஹிட் டைகர் சாகசம்!
மினி
லயன்
2

க்கத் தவறாதீர்கள்!

# சூப்பர் ஸ்டார் லக்கி லூக் தோன்றும்

# பயங்கரப் பொடியன்!

முழுக்க முழுக்க
வண்ணத்தில்!

விபரங்கள் நடுப்பக்கத்தில்!



லயன் காமிக்ஸ்
தீபாவளி சூப்பர் ஸ்பெஷலில்
வருகிறது!

**R. முருகேசன் விக்கிரமசிங்கபுரம்.**

'கோப்ரா தீவில் ஸ்பைடர்' கதையை விரும்பிப் படித்தேன். அதில் ஸ்பைடர், பாம்பு உடையுடனும், கோப்ரா என்ற பெயருடன் ஏமாத்தி வரும் ரெவலுக்கும் அவனது கூட்டாளிக்கும் நன்ருக பட்டை நாமம் செலுத்தி திரும்புவது மிகவும் இனிமையாக இருந்தது.

'பேரிக்காய் போராட்டம்' இதில் என் உள்ளம் கவர்ந்த இடமாக சுஸ்கியும், மிக்கியும், பேரிக்காய்த் தோட்டத்தில் ட்ராகனுடன் சண்டையிடும் காட்சி மிகவும் இனிமையாகவும், சந்தோஷமாகவும் இருந்தது. பின் மூன்று ராட்சஸர்களிடம் சண்டையிட்டு விரட்டியடிப்பதும் இனிமையாக இருந்தது. மீண்டும் இதே போல் தமாஷ் கதைகளை வெளியிடும்படி உங்கள் ரசிகனைக் கேட்டுக் கொள்கிறேன்.

**வீ. மாரிமுத்துராஜன், திண்டுக்கல்.**

[illegible] மினி லயனின் அட்டைப் படத்தைப் [illegible] தான் [illegible] யின் குளிர்ச்சி போல் [illegible] ளுப்பாக இருந்தது.

**திருப்பத்தூர்**

[illegible] ரியரும், அட்ட-[illegible] கிளப்புகின்றன. [illegible] தற்கும், 3 கதை

**● வீ. செல்வகுமார், திண்டுக்கல்.**

மினி லயனின் கதைகள் பட்டு மெத்தைபோல இதமாக இருந்தன. தீபாவளி ஸ்பெஷல் விலை 10/– ரூபாயானாலும் வாங்கத் தயார். பேரிக்காய் போராட்டம் அட்டகாசமாக இருந்தது.

**● M. S. ஆனந்த ராஜன், கீரைக்காரன்தட்டு, திசை.**

ஜூனியர் லயன் மினி லயன் படித்தேன். இதுபோன்ற கதைகளை என் வாழ்நாள் முழுதும் தந்தால் நான் படித்துக் கொண்டேயிருப்பேன். வாழ்க ஜூனியர் லயன்! மினி லயன்!

**● I. இஸ்மாயில், தல்லாகுளம்.**

கோப்ரா தீவில் ஸ்பைடர் கதை படுசூப்பர். ஒவ்வொரு இடமும் ஒரு திருப்பு முனையாகவே அமைந்திருக்கிறது நல்லவன் போல் நடித்து ஸ்பைடரை வம்பில் மாட்டிவிடும் கோப்ரா ரெவல் வழக்கம் போல் முடிவில்தோல்வியடைவதன்மூலம் ஸ்பைடருக்கு நிகர் அவரே என்பது நிரூபணமாகிறது. மற்றும் சுஸ்கி விஸ்கி தோன்றும் 'பேரிக்காய் போராட்டம்' கதை வயிறு குலுங்க சிரிக்க வைத்தது. உண்மையிலேயே மினி&ஜூனியர் ஓர் வரப் பிரசாதம் தான்!

## வாசகர் கடிதம்!



வருகிறது!
லயன் காமிக்ஸின்
தீபாவளி சூப்பர் ஸ்பெஷல்!
12 சூப்பர் சித்திரக் கதைகள்!
உங்கள் அபிமான ஹீரோக்களின் குவியல்!
ரூ.10/-
தீபாவளி ஸ்பெஷலில் வரவிருக்கும் கதைகளை- கதைச் சுருக்கங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆவலாய் இருந்தால் எழுதி அனுப்புங்கள்... விபரங்களை அனுப்பி வைக்கின்றோம்!
லயன் காமிக்ஸ்

# கொரில்லாத் தீவு!


தென் மேற்கு ஆப்பிரிக்க கடற்கரையிலிருந்து 52 மைல் தொலைவிலிருந்த கான்கோலா தீவில்-புரபஸர் லோ-மாக்ஸின் தலைமையில் விஞ்ஞானிகள் பலர் விண்வெளி பயணத்துக்கு ஏற்ற வகையில் கொரில்லாக்களின் மதி நுட்பத்தை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்-ஒரு நாள், பின் மாலைப் பொழுதில்-
CAPTAIN
உங்களுடைய, அற்புத திறன்கொண்ட ஸீரம் - Xன் பயனுக இந்தக் குரங்குகளின் புத்திசாலித்தனம் விரைவிலேயே தேவையான அளவுக்கு உயர்ந்துவிடும் புரபஸர்-
குறிப்பாக, இந்த காப்டனிடம் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் எனக்கே பிரமிப்பூட்டுகிறது-


மனிதனுக்கு மிக நெரு
இயல்புடைய இந்த சிம்பன்ஸி
வகை குரங்குகள் இ கையா
கவே புத்
இந்தக் குரங்கு விரை வேயே
விண்வெளி பயணத்த குத்
தயாராகி விடும்!
அவ்விருவரும் திரும்பி நடக்கையில், சட்டென்று கையை நீட்டி லோமாக்ஸின் பையிலிருந்த சாவியை திருடி எடுத்துக்கொண்டது அந்த சிம்பன்ஸி!
வெளியேறி விட்டேன்! மந்த புத்தியுடைய, ஆனல் அசாத்திய வலிமையுடைய கொரில்லாக்களுக்கு ஸீரம்-Xஐ கொடுத்து அவற்றின் புத்திசாலித்தனத்தை உயர்த்துவேன். சக கொரில்லா என்ற முறையில் கூடுதல் விவேகம் உடைய என் ஆணைகளுக்கு அவை கட்டுப்பட்டு நடப்பது உறுதி!
அதன் விழிகளில் குரோதம் மிளிர்ந்தது
இந்த முட்டாள் புரபஸரின் சீரம் X எனது மதிநுட்பத்தை பெருமடங்கு அதிகரிக்கச் செய்ததோடு, பேசவும் சிந்திக்கவும் வகை செய்து விட்டது! இப்பொழுது நான் சாதாரண கொரில்லா அல்ல-மனிதர்களுக்கெதிரான புரட்சியைத் துவங்கவிருக்கும் கேப்டன் கொரில்லா நான்!


அனைவரும் தூங்கிய பின், இரகசியமாக சென்று ராட்சஸ கொரில்லாக்களுக்கு தான் திருடிப்பெற்ற ஸீரம் X-ஐ கொடுத்தது, காப்டன் சிம்பன்ஸி. விரைவிலேயே அந்த அற்புத மருந்து வேலை செய்யத் தொடங்கியது. அனைத்து விலங்குகளையும் விடுவித்த காப்டன் உடனே தாக்குதலை நடத்தாமல் சிந்துத்து செயல்பட்டது-
மனிதர்களிடமுள்ள பயங்கர ஆயுதங்களை முதலில் அப்புறப்படுத்தியாக வேண்டும்-டிம்பா,- நீ - வா என்னோடு!
சரி-மாஸ்டர்!
கொரில்லா புரட்சி துவங்கியிருந்தது-
உருவம் சிறியதாகையில், ஜன்னல் வழியே போக வர சிரமம் இருக்கவில்லை- எல்லா ஆயுதங்களையும் திருடி எடுத்துக் கொண்டு விட்டன-
கார்ட்டரின் அறையில்-
ஒரு சிம்பன்ஸி! எதையோ திருடிக் கொண்டு ஓடுகிறது!
விட்டேனா பார்-உன்னை-
முட்டாளே விடு-என்னை!



அதிர்ந்து விட்ட கார்டனின் பிடி கொஞ்சம் தளரவே தப்பியோடிவிட்டது சிம்பன்ஸி-
சிம்பன்ஸி ரைபிள்களை திருடுகிறது-பேசவும் செய்கிறது-இதற்கெல்லாம் என்ன அர்த்தம்!
வெளியேறி நடந்தார் கார்ட்டர்-
ஆய்வு கூடத்தில் விளக்கு எரிகிறது! இவ்வளவு சீக்கிரமாக புரபஸர் வேலையை தொடங்கி விட்டாரா?
ஜன்னல் வழியே மெள்ள எட்டிப் பார்த்த கார்ட்டருக்கு முதுகுத் தண்டு ஜில்லிட்டுப் போனது-
ஐயோ-இது என்ன விபரீதம்? கொரில்லாக்கள் கூண்டை விட்டு வெளியேறிவிட்டது மட்டுமின்றி ஒவ்வொன்றும் லாவகமாக ரைபிள்களை ஏந்தி நிற்கின்றனவே!
கலவரமடைந்த கார்ட்டர் ஓடிச் சென்று புரபஸர் லோமாக்ஸை எழுப்பினர்--
கொரில்லாக்கள் கூண்டிலிருந்து தப்பி விட்டன-ஒவ்வொன்றும் கையில் ரைபிளை ஏந்தி நிற்கிறது!
ஏதாவது கெட்ட கனவு கண்டாயா?
ஆனல இருவரும் வெளியே வந்து பார்தத போது-
கொல்லுங்கள் அவர்களை-மனிதர்கள் அனைவரையும் பலி கொள்வோம்!


பார்த்தீர்களா புரபஸர்- காப்டன் தலைமை தாங்கி நடத்துவதை!
அவர்களை தாக்குங்கள்!
சே- கொஞ்சமும் நம்ப முடியவில்லையே!
தோட்டாக்கள் தங்களை நோக்கி சீறி வரத்தொடங்கியதும் கார்ட்டரும் செயலில் இறங்கினர்-
போய் மற்றவர்களையும் எச்சரியுங்கள்! ஜீப்பில் எல்லோரும் டான்வில்லாவுக்கு விரையுங்கள். நான் இந்த சைத்தான்களை தேக்கி நிறுத்தி வைக்கிறேன்!
இத்தனை நெருக்கத்தில் என் குறி தப்பாது- ஆனால் ஒவ்வொன்றையும் வீழ்த்த ஐந்து தோட்டாக்களையாவது நான் செலுத்தவேண்டியிருக்கும்!
தன் வீரர்கள் பலர் செத்து வீழ்ந்தபின் காப்டனின் கீச்சுக் குரல் உரத்து எழுந்தது-
பின் வாங்கி ஓடுங்கள்- தோழர்களே- ஆய்வுக் கூடத்தை நோக்கி!



தப்பியோடும் மனிதர்களை தடுத்து நிறுத்த ஓடுங்கள்-நீங்களிருவரும்-அவர்களிடம் ஆயுதம் ஏதுமில்லையாதலால் வேலை சுலபமாக இருக்கும்!
இதற்கிடையே லோமாக்ஸும் திக்பிரமையடைந்த சகாக்களும் பரபரப்போடு ஜீப்புகளில் ஏறியமர்ந்தனர்-
டார்ன் வில்லாவிலுள்ள இராணுவ தளத்தை விரைவாக சென்றடைந்ததும் கார்ட்டரை மீட்க உடனே ஏற்பாடு செய்யவேண்டும்.
புரபஸர் அங்கே பாருங்கள்!
கொரில்லாக்கள்!
ஆயுதமேந்திய இரண்டு கொரில்லாக்கள் ஆவேசத்தோடு தங்களை நோக்கி வருவதைக்கண்ட புரபஸர் ஜீப்பை பாய்ந்து செலுத்தினார் அவைகளை நோக்கி-
இறுகப் பற்றிக் கொள்ளுங்கள் தோழரே!


8
குனிந்து பதுங்கிக் கொள்ளுங்கள்!
இந்த திடீர் தாக்குதலால் நிலைகுலைந்த அந்த கொரில்லாக்கள் கையிலிருந்த ரைபிளை பயன்படுத்த மறந்து சரிந்தன-
ணிங்!
விலகி அப்பால் செல்லுங்கள் சைத்தான்களே!
மோட்டார் எஞ்சினின் உறுமலை செவிமடுத்தார் கார்ட்டர்-
அவர்கள் பத்திரமாக கிளம்பி விட்டார்கள்- அடுத்து இந்த சிம்பன்ஸி என்ன செய்ய உத்தேசித்திருக்கிறதோ?
அந்த மனிதன் கார்ட்டரால் நமக்கு ஏகப்பட்ட தொல்லை. அவனுடைய குடிலுக்கு தீயிட்டு முதலில் அவனை ஒழிப்போம்!
எங்களையா எதிர்க்கத் துணிந்தாய்! ஒன்று நீ உள்ளேயிருந்து தீயில் வெந்து மாளவேண்டும- அல்லது வெளியேறி வந்து என் தோழர்களின் தோட்டாவுக்கு பலியாகவேண்டும்!



மறுகணம் கார்ட்டரின் குடில் பற்றி எரிந்தது-
ஐயோ- கூரை தீப்பற்றிக் கொண்டு விட்டதே- தொலைந்தேன்!
நாலா திசைகளிலும் தீயின் நாக்குகள்-
அந்த மண்வெட்டி- தப்பிக்க உதவக்கூடும்!
நொடியில் சுரங்கப்பாதை தோண்டியாக வேண்டும்!
கார்ட்டர் ஒருவழியாக வெளியேறியதும்-
இனி அந்த சைத்தான்களின் பார்வையில் படாமல் நழுவ வேண்டும்!
தீ ஒருவாறு அணைந்தபின்-
செத்தொழிந்தான்! இந்த தீவை கைப்பற்றும் என் முயற்சிக்கு இடையூறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கும் இந்தக் கதிதான்!


புரபலர் டான் வில்லாவுக்குத்தான் சென்றிருப்பார். தப்பிவிட்டதாக அவர் மனப்பால் குடிக்கலாம்: இதோ-தோழர்களே - ஓடி வாருங்கள், வேகமாக!
மரத்துக்கு மரம் தாவி காற்றினும்கூடியவேகத்தில் டான் வில்லாவை நோக்கிப் பறந்தது அந்த குரங்குப் படை-
திடீரென்று-தன் வீரர்களை நிற்கும்படி உத்தரவிட்டது காப்டன்-
டான் வில்லா இராணுவ தள துருப்புகள் அங்கே டிரக்கை பழுதுபார்க்கிறார்கள்-வேலைமுடியும் வரை கொஞ்சம் பொறுப்போம்!
பத்து நிமிடங்களுக்குப் பின்-
ஓ. கே-சாரஜண்ட்-வேலை முடிந்து விட்டது!
சரி-கிளம்பு வோம்!
சுடுங்கள்!


யாரோ தாக்குகிறார்கள்-ஜாக்கிரதை!
ஓ!
அஹ்!
படை வீரர்களை வீழ்த்தி யானதும், டிரக்கை சூறையாடியது கொரில்லா படை-
பிரமாதம்-இரண்டு டிரக்குகள், சப்-மெஷின் துப்பாக்கிகள்-ஏகப்பட்ட வெடி மருந்துகள்! இனி நம்மைத் தடுத்து நிறுத்த யாராலுமே முடியாது-
இரண்டு மணி நேரம் கழித்து டான் வில்லா இராணுவ தளத்தை சென்றடைந்தார் புரபஸர்-தன் சகாக்களுடன்-
முகப்பு வாயிலில் யாரும் காவல் நிற்கக் காணோம்-எங்கும் அசாதாரண அமைதி நிலவுகிறது-எல்லாமே வித்தியாசமாக தோன்றுகிறது-


கொரில்லாக்கள்- இராணுவ உடையில்!
பிடியுங்கள் அனைவரையும்- உயிரோடு வேண்டும்!
சட்டென்று சுதாரித்துக் கொண்டார் புரபஸர்-
ஜீப்பைத் திருப்பு- சீக்கிரம்!
வீர்ர்ர்ர்ர்...
ஜீப் திரும்பி விரைய முனைந்த போது புதிய விபரீதம் ஒன்று அவர்களை எதிர் கொண்டது-
சுடு!


டமால்!
ஆ!!
ஆ!
புரபஸர்- நீங்களும் உங்களுடைய தோழர்களும் என் கைதிகள்! இவர்களுடைய விதியை நான் தீர்மானிக்கும் வரை, கொண்டு போய் அடைத்து வையுங்கள்!
சைத்தான்களே!
இதற்கிடையே நடந்த அனைத்தையும் மறைவிடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார் கார்ட்டர்-
நான் இந்த விலங்குகளை எதிர்க்க ஆயுத பலம் வேண்டும்- ஆகா! அதோ- ஒரு டாங்க் நிற்கிறது!
இருள் கவிழும் வேளையில் தளத்தின் சுற்றுச் சுவரிலிருந்து கீழே குதித்தது ஓர் கரிய உருவம்-
பிரதான கட்டிடத்தினுள்-
நாளை நம் கைதிகளின் தலைவிதியை தீர்மானிப்போம். பின்னர் இத்தீவிலுள்ள மற்ற மனிதர்கள் மீது நம் கவனத்தை செலுத்துவோம். விரைவிலேயே இந்தத் தீவு நம் ஆதிக்கத்தின் கீழ் வந்து விடும்! அதென்ன சப்தம்?
டாங்க்கை இப்போது நான் நெருங்கலாம்- அபாயமின்றி!



கைதிகள் அடைக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் பக்கவாட்டுச் சுவரை இலக்கு வைத்து, டாங்கிலிருந்த பீரங்கி ஒருமுறை முழங்கியதைஅடுத்துசுவரில் பெரியஓட்டைவிழுந்தது.
நான் தான் கார்ட்டர்...! ஓடி வாருங்கள் டாங்க்கைநோக்கி!
மூடியைமூடுங்கள்!
அந்தகொரில்லாக்கள் சுட ஆரம்பிக்குமுன் விலகிச் சென்று விட வேண்டும்!
ஆத்திரமடைந்த காப்டன் நடவடிக்கை எடுக்குமுன் மரக்கதவை பிளந்து கொண்டு வெளியேறி விட்டது டாங்க்...
நாம் எங்கே போகிறோம்! புரபஸர்!
ஆய்வுக் கூடத்திற்கு! மீதமுள்ள ஸீரத்தை உடனடியாக அழித்தாக வேண்டும்! நானும் கார்ட்டரும் அங்கே செல்கிறோம்!
மற்றவர்கள் காண்டா துறைமுகத்திற்குப் போய் அங்குள்ள அதிகாரிகளை எச்சரியுங்கள்!


விடியும் வேளையில்---
நாங்கள் விடைபெறுகிறோம் புரபஸர்!
சரி... சென்று வாருங்கள்!
ஆனல் கொரில்லாக்கள் டாங்க்கை வழிமறிக்க தயாராயிருந்தன. ஆழமான ஆற்றின் குறுக்கே மரப்பாலத்தின் மீது டாங்க் சென்று கொண்டு இருந்த போது-
நான் சைகை செய்ததும் விசையை இழு ..
பூம்!
டாங்க் ஆற்றின் மத்திய பகுதியை நெருங்கிய போது
ஆ!!
டமால்!
டாங்க் படுபயங்கரமாக நீரினுள் தொப்பென்று விழுந்து மறைந்தது.


வெற்றி! வெற்றி! கார்ட்டரும புரபஸரும் தொலைந்தார்கள்!


கேப்டன் கொக்கரித்தது-
நம்மை எதிர்ப்பவர்களுக்கு இது தான் முடிவு! இனி நான் காண்டா துறைமுகத்துக்குச் சென்று திடீர் தாக்குதல் நடத்த வேண்டும்!
கொரில்லா படைகள் வேகமாக அணிவகுத்து விரைந்தன ......
காண்டா துறைமுகத்தை கைப்பற்றி விட்டால் இந்த தீவையே கைப்பற்றி விட்ட மாதிரி!


கார்ட்டர் தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டார்...
புரபஸர் டாங்க்கினுள் மாட்டிக்கொண்டு விட்டாரோ!
மூச்சை நன்ருக உள்ளிழுத்துக் கொண்டு நீரினுள் மூழ்கினர் - கார்ட்டர்...
அதோ... இருக்கிருர்!
புரபஸர்... உங்களுக்கு ஒன்றுமில்லையே?
நன்றி— கார்ட்டர்!
நாம் அனைவரும் கூண்டோடு கைலாசம் சென்றுவிட்டதாக அந்த சிம்பன்ஸி எண்ணக்கூடும். துறைமுக அதிகாரிகளேஎச்சரிக்க மற்றவர்கள் காண்டா நோக்கி பயணம் செய்யும் விபரமும்அந்த சைத்தானுக்கு தெரியாது.
சில மணி நேர இடைவெளிக்குப் பின் அவர்களிருவரும் ஆய்வுக் கூடத்தைச் சென்றடைந்தனர்...
ஒரு வ யாக வந்து சேர்ந்து விட்டோம்.. புரபஸர்!
ஐயோ... அங்கே கவனி—


திக்பிரமையில் அவர்கள் செயலிந்து நிற்கையில் ஒருகுரங்கின் கீச்சுக் குரல் கேட்டது...
பிரமாதம்...இந்தப் படையை வெல்ல யாராலுமே முடியாது
நிறைய குரங்குகளை தயார் செய்து விட்டது அந்த சிம்பன்ஸி...
நான் பயந்தமாதிரியே, ஆய்வுகூடத்தில் மீதமிருந்த அத்தனை ஸீரத்தையும் பயன் படுத்தி ஏகப்பட்ட கொரில்லாக்களுக்கு போரிடும் ஆற்றலை கொடுத்து விட்டது!
மறுகணம்— காதில் விழுந்த சலசலப் பைக்கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர் ..
புரபஸர்... ஓட்டம் பிடியுங்கள்...
ஆனால் ஓட யத்தனித்த புரபஸர் வேர் தடுக்கி தலை குப்புற விழுந்தார்—
ஆ...வ்! என்னைப் பற்றி கவலைப்படாதே கார்ட்டர்—உன்னை காப்பாற்றிக் கொள்!


அகப்பட்டுக் கொண்ட புரபஸரை மர சட்டத்தில் பிணைத்தன குரங்குகள், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது-
இதற்குரிய விலையை விரைவிலேயே நீங்கள் கொடுக்கவேண்டிவரும்
ரைபிள்களை உறுதியாக பற்றி நில்லுங்கள்-இப்படியெல்லாம் அசைக்கலாகாது...
ஹீ...ஹீ...மனிதர்கள் யாரும் இப்போது உங்களைக்காப்பாற்ற முடியாது...புரபஸர்!
மறுகணம்—
நன்ருககுறி வையுங்கள்...
ஆனல் சுட உத்தரவு பிறப்பிக்கப்படவிருந்த வேளையில் பின்னலிருந்துசரமாரியாக வந்து சேர்ந்தன—தோட்டாக்கள்
ஆ...வ்!
அந்த திடீர் தாக்குதலால் குரங்குகள் குழப்பமடைந்து சிதறிஓடத்தொடங்கின...
யாரோ நம்மை தாக்கு கிறார்கள்...ஓடிப்பதுங்கிக் கொள்ளுங்கள்


மறைவிடத்திலிருந்த கார்ட்டர் தனக்குள் புன்னகை செய்தார்-
சீக்கிரமே உங்களுடைய அட்டகாசத்துக்கு முடிவு கட்டுவேன்!
டுமீல்!
சில வினாடிகளுக்குப்பின், மீண்டும் குறி வைத்தார் கார்ட்டர்...
இனி, புரபஸரை விடுவிக்க வேண்டும்!
டுமீல்
ஒவ்வொரு தோட்டாவும் புரபஸரை பிணைத்திருந்த கொடிகளை அறுத்தெறிந்தது...
பட்!
உங்களுக்கு நான் பாதுகாப்புஏற்படுத்திக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன்! ஓடிவந்து விடுங்கள்!
மீண்டும் உன்னைப்பார்பேன் என்ற நம்பிக்கையை இழந்து விட்டிருந்தேன்!
டுமீல்
டுமீல்


உப்...தப்பி விட்டேன்— ஒ நவழியாக!
வாருங்கள்—ஓடிப்போய் விடலாம்...இங்கிருந்து
அவர்களை பின் தொடர வேண்டு மென்பதில்லை...இவர்களுடைய அற்ப முயற்சிதீவைகாப்பாற்றப்போவதில்லை இனி நாம் நேராககாண்டா சென்று நம் பெருந்தலைவரோடு சேர்ந்து கொண்டு விடலாம்!
இதற்கிடையே லோமாக்ஸின் சகாக்கள் பத்திரமாக காண்டா துறைமுகம் சென்றடைந்தனர்.
சொல்வதை நம்புங்கள்.. இத்தீவைப்பிடிக்க கொரில்லாக்கள் முயற்சிக்கின்றன!
இம்மாதிரியான பிதற்றல்களை நம்ப நாங்களும்உங்களைப் பேரல்பைத்தியக் காரர்கள் அல்ல!
படீரென்று கதவுதிறந்து கொண்டது—
என்ன... இதெல்லாம்?
ஸார்...ஸார்—நகரை ஆயுதமேந்தியகுரங்குப் படைதாக்கி வருகிறது!



எல்லா இராணுவ சாவடிகளையும் உஷார் படுத்து! உடனடியாக அவர்களுடைய உதவி இங்கே காண்டா துறைமுகத்துக்கு தேவை என்று சொல்—குரங்குப் படை ஒன்று எங்களை தாக்க முயன்று வருகிறது!
காண்டா நகரின் புறநகர் பகுதியில்—
முன்னேறிச் சென்று தாக்குங்கள்—வெற்றி நமதே...!
வெறிபிடித்த பேய்களைப்போல் தங்களை எதிர்த்தவர்களை எல்லாம் கொன்று குவித்தது குரங்குப் படை...
இராணுவ வீரர்கள் திருப்பி தாக்கினார்கள். ஆனால் வலிமை மிக்க கொரில்லா படையை சமாளித்து நிற்க முடியாமல் பின்வாங்க நேரிட்டது.
ஊஹூம்... இவைகளை தடுத்து நிறுத்த முடியாது திரும்பி ஓடி வாருங்கள்—அரசு தலைமை கட்டிடத்துக்கு!
இதற்கிடையே, புரபஸரும் கார்ட்டரும் நகருக்கு வெளியே வந்து சேர்ந்தனர்...
அடக்கடவுளே! அந்த கொரில்லாக்கள் ஏற்கனவே தாக்கத் தொடங்கி விட்டன போலும்...!
வாருங்கள்! அந்த புல்டோசரைப் பயன் படுத்திப் பார்க்கலாம்!
23


பெருத்த ஓசையோடு, முடிந்த வரை வேகமாக சென்ற அந்த புல்டோஸர் விரைவிலேயே எதிரிகள் இருந்த இடத்தை நெருங்கியது
சைத்தானே... வா மேலே!
ஆ!
அரை டஜனுவது தேறும்!
ஊய்ய்.........! கார்ட்டரும்... புரபஸரும் வந்து விட்டார்கள்!
காண்டா படைப்பிரிவினர் தக்க தருணத்தில்காப்பாற்றப்பட்டனர் — புல்டோஸரின் உதவியால்!
வாருங்கள்— உள்ளே ஓடிப் போய்விடலாம்!
முட்டாள்களே... அந்த இயந்திரத்தை இயக்கு பவர்களே தீர்த்துக்கட்டுங்கள்!
அரசு தலைமைகட்டிடத்தினுள்
இந்த இருநபர்களும் தருணத்தில் வந்துஉதவியதால் தப்பி விட்டோம்... மேற்கொண்டு படைபலம் வந்துசேரும் வரை எதிரிகளை இவர்களால் தேக்கி வைக்க இயலும் என்றே தோன்றுகிறது!
அதேவேளையில் உதவி-க்கு விரைந்து வந்து கொண்டிருந்தது இன்-ஞெரு படைப் பிரிவு...
குரங்குப் படை தாக்குவதாக தகவல்— சரியான பிதற்றல்..!


கணம் ...
நிறுத்து...!
வீரர்களே— இறங்கிச்சென்று அந்தமரத்தை அப்புறப்படுத்துங்கள்...
இதற்கிடையே, அங்கே கார்ட்டரும் புரபஸரும் சிக்கலில் மாட்டிக் கொண்டனர்...
ஏன் நின்று விட்டது?
எரிபொருள் தீர்ந்து விட்டது... சே— கழுத்தறுப்பு!
இப்படியொரு சந்தர்ப்பத்தைத் தானே அந்த சிம்பன்ஸி எதிர்பார்த்துக் கொண்டிருந்தது...
அகப்பட்டுக் கொண்டார்கள்... பழிதீர்க்க அரிய சந்தர்ப்பம்...!


26
விடாதீர்கள்— கொல்லுங்கள்!
உயிர் பிழைக்க ஒரே ஒரு வாய்ப்பிருக்கிறது, புரபஸர். கிரேனை உயர்த்தவோ, தாழ்த்தவோ முடியாதுஎன்றாலும் பக்கவாட்டில் நகர்த்த முடியும்......



மறு விநாடி, கிரேனின் தொட்டியை அரசு கட்டிடத்தின் ஜன்னல் பக்கமாக நகர்த்தினர் கார்ட்டர்...
இதன் வழியாக இருவரும் தப்பி வர நினைக்கிறார்கள் போலும்...
மீல்-
மீல்-
அவர்களுக்கு பாதுகாப்பாக, தோட்டாக்கள் எதிரிகளை குறி வைத்து சென்று கொண்டேயிருக்க...
தப்ப விடாதீர்கள் அவர்களை...
நன்றி லெப்டினண்ட்! தக்க சமயத்தில் வந்து காப்பாற்றினீர்கள்!
கவலை வேண்டாம்! இந்த ஜன்னலை குறிவைத்து இரு இயந்திர துப்பாக்கிகளை நிலைப்படுத்தி வைத்துள்ளேன்.
இதற்கிடையே, பீதியடைப்பட்ட நகர மக்களை நோக்கி பிரசங்கம் செய்துகொண்டிருந்தது காப்டன்-
பின்னர்-முற்றுகைக்கு உள்ளாகியிருந்த கட்டிடத்தினுள்-
டாங்குகளும், பீரங்கிகளும், ஏராளமான வீரர்களும் நம் உதவிகளுக்கு விரைந்து வந்து கொண்டிருக்கின்றனர்-அவர்கள் வந்துசேரும் வரை எப்படியாவது நாம் தாக்குப் பிடித்துவிட்டால் போதும்!
காண்டா நகர பெருமக்களே-எங்களிடம் வகையாக மாட்டிக் கொண்டு, அங்கே அடையிட்டுக் கிடக்கும் உங்களுடைய லாயக்கற்ற தலைவர்களும், சோதா படைவீரர்களும் விரைவிலேயே அழிக்கப்படுவார்கள். இனி, நான்தான் இந்த தீவுக்கு தலைவன். என் தலைமையை ஏற்றுக் கொள்பவர்கள் மட்டுமே உயிர் பிழைக்க முடியும்-ஜாக்கிரதை!
27


அச்சத்தோடும், குழப்பத்தோடும், ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர் அந்த அப்பாவி காண்டா நகர வாசிகள். மறு-நிமிடம், ஏகோபித்த குரலில்-
வாழ்க-கான்கோலாவின் அரசர்-காப்டன்!
அரசு கட்டிட உச்சியில்-
ஹலோ-அங்கே-எழும் புழுதி மண்டலம்?
ஆம்-அங்கே-விரைந்து வந்து கொண்டிருந்தது-உதவிப் படை-
அந்த இனிய செய்தி கீழே தெரிவிக்கப்பட்டது-
இனி, சீக்கிரமே அந்த சிம்பன்ஸியின் அட்டகாசத்துக்கு நிரந்தரமாக ஒரு முற்றுப்புள்ளி விழுவது நிச்சயம்!
அதையடுத்து-
அதோ வந்து சேர்ந்து விட்டார்கள்!



ஆனல்-
புரியவில்லையே! தப்பியோடாமல் கொரில்லாப் படை அப்படியே நிற்கிறதே!
அதை கொண்டா- இப்படி!
அவை நம் படையே அல்ல! உதவிக்கு வந்த படையை தாக்கி, வாக னங்களை இந்த கொரில்லாக்கள் கைப்பற்றிக் கொண்டு விட்டன போலும்!
பைனகுலரில் தென்பட்ட காட்சியைக் கண்டு திகைத்து விட்டார் கார்ட்டர்-
அழியப் போவது கொரில்லா படையல்ல புரபஸர்- நாம் தான்!


30
தலைமைக் கட்டிடத்தை முற்றுகையிட்டது கொரில்லா படை!
முட்டாள் மனிதர்களே, கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள். உடனடியாக சரணடைந்தீர்கள் என்ருல் உங்களுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கப்படும். எதிர்க்கத் துணிந்தீர்களேயாளுல், என் பீரங்கிகள் உங்களை சொர்க்கத்துக்கு அனுப்பி வைக்கும்! பத்துநிமிட அவகாசம் கொடுக்கிறேன். தீர்மானிக்க!
பீரங்கிகள் தயார்!
நல்லது- இனி ஒன்று அவர்கள் என் தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும்- அல்லது செத்தொழிய வேண்டும்!


ஒலிபெருக்கி மூலம் எங்கும் எதிரொலித்தது அந்த ஆணவ சிம்பன்ஸியின் அதிகாரக் குரல்-
கட்டிடத்தினுள்ளே-
சரணடைவதுதான் இப்போதைக்கு விவேகமான செயலாக இருக்கக்கூடும்-செத்து விட்டால் எதை சாதிக்க முடியும்? மரணத்தை ஒத்திப்போட்டால் கான்கோலாவை மீட்க ஏதாவது முயற்சியை மேற்கொள்ள வாய்ப்புண்டு-
ஆனால் அந்த சைத்தானின் வார்த்தைகளில் எப்படி நம்பிக்கை வைப்பது?
உன் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுகிறோம்!
எல்லா வீரர்களும் ஆயுதங்களை எறிந்ததும்-
நான் கொடுத்த வாக்குறுதியின் படி உங்களுக்கு இனி எந்த தீங்கும் நேரிடாது! கார்ட்டரைத் தவிர- பிடியுங்கள் அவனை!
மறுகணம்-
இவனைப் பிடியுங்கள்!
நடக்காது ஒரு போதும்!
கும்!
மறுவிநாடி திம்பாவின் முரட்டுக்கரம் கார்ட்டரின் முகத்தில் இறங்கியது-
31



பின்னர் கார்ட்டருக்கு சுயவுணர்வு திரும்பிய போது-
என்ன வேண்டும்- குரங்கு முஞ்சி பிசாசே!
உன் கதையின் கடைசி அத்தியாயம் நாளைக்கு-இன்றிரவு நன்ருக தூங்கி புத்துணர்வோடு எழ முயற்சி செய்-நாளை உன் முழு பலத்தையும் பிரயோகிக்க வேண்டியிருக்கும்!
மறுநாள்-பிரம்மாண்டமானதொரு அரங்கில்-
பண்டைக் காலத்தில மற்ற உயிரினங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, தன் வலிமையை பறைசாற்றி வந்தது மனித கூட்டம்-இன்று-மனிதன் எத்தனை அற்பமானவன்-எங்களோடு ஒப்பிடும்போது-என்று இப்போது, இங்கே நிருபணமாகப் போகிறது. ம்ம்-தொடங்கட்டும்-போட்டி!
மறுகணம் மைதானத்தில் இரு உருவங்கள் தோன்றின-ஒன்றையொன்று எதிர்த்தவாறு-
என் சகாவிடம் ஆயுதம் ஏதுமில்லை! ஆனுல் மனிதனிடம் ஈட்டியும், கேடயமும் இருக்கிறது. இருந்தும், இறுதியில் அழியப் போவது-மனிதனே!
வாழ்வா-சாவா என்ற போராட்டம்!
அந்த நபர் பிழைக்க வாய்ப்பே இல்லை!
சே- ஈட்டியை பிடுங்கிக் கொண்டு விட்டதே- தொலைந்தேன்!
எப்படி அந்த ராட்சஸ விலங்கை சமாளிக்கலாம் என்று கார்ட்டர் சுற்றிச் சுற்றி வந்தவேளையில்-



கொரில்லா நெருங்கியதும்-
இந்தா மண்ணை உன் கண்களில் தூவிவிட்டேன்!
ஆவ்!
அடுத்து அந்த சைத்தான் வெறியோடு கார்ட்டரை நோக்கி பாய்ந்து வந்தது-
அந்த ஈட்டியை திரும்பப்பெற ஏதாவது ஒரு யுக்தியை கையாண்டால்தான் உண்டு
தன் தலைவனின் ஆணையினால் தூண்டப்பட்ட கொரில்லா சட்டென்று பாய்ந்து தோலிலானை கேடயத்தைப் பற்றியது-
கிட்டே நெருங்கவே விடக்கூடாது!
கோபாவேசமாக கத்தியது காப்டன்-
ஜிம்பா- அவனை வீழ்த்து விடாதே!
இந்த அவகாசம் போதும்-ஈட்டியை மீண்டும் பெற!


இந்தா ஒரு குத்து-
வாங்கிக் கொள் பிசாசே!
படீர்!
ஆனல் அந்த ஈட்டி காயத்தை ஏற்படுத்தியதேயன்றி அந்த மிருகத்தை வீழ்த்தவில்லை- வெறியோடு பாய்ந்து வந்தது-
ஒன்றை வீழ்த்த ஐந்து தோட்டாக்கள் அவசியப்பட்டது- எனவே இன்னும் சரியாக வைக்க வேண்டியது அவசியம்!
ஹீ! ஹீ! இதுதான் தருணம்!
பயலை தீர்த்துக்கட்டு ஜிம்பா!
ஆ-ஆ-ஆவ்!
ணங்!
ஏதாவது யுக்தி செய்தாலன்றி தன் நண்பனின் கதை இங்கே முடிந்துவிடும் என்று பயந்தார் புரபஸர்-
இந்த உலோக தகட்டை உரிய கோணத்தில் பிடித்து சூரிய கிரணங்களை அந்த மிருகத்தின் விழிகளில் படுமாறு செய்வேன்
யுக்தி பலித்தது-
என்ன ஆயிற்று-
குருடாகிப் போனது போல இப்படி தடுமாறுகிறதே!



சரியாக பார்க்க முடியாத ஜிம்பா கார்ட்டரின் இருப்பிடம் தெரியாமல் காற்றில் துழாவியது-
இம்முறை குறி தப்பாது!
விர்ர்ர்ர்..
சரிந்து விழுந்தது அந்த மாமிச மலை!
ஆங்காரமாக உறுமியது காப்டன்!
இத்தோடு விட்டுவிடுவதாக இல்லை- என் பிரஜைகளுக்கு முன் என்னை அவமானப் படுத்திவிட்ட திமிருக்கு உரிய விலை கொடுக்க வேண்டும் அவன்!
கொண்டு போங்கள் அவனை!
மனிதனுக்கே வெற்றி!
வீழ்த்திவிட்டேன் அந்த மிருகத்தை!


சிறைக்கூடத்திற்குச் செல்லும் வழியில்-
சிறைக்கதவின் பின்னல் அடைபடுமுன் ஏதாவது உபாயம் செய்து தப்பித்-தால்தான் உண்டு!
தன்னை துரிதமாக தயார்ப்படுத்திக் கொண்டார் கார்ட்டர்-
சட்டென்று ஸ்டியரிங் மீது பாய்ந்து ஜீப்பை சாலையிலிருந்து விலக்கி ஏதா-வது ஒரு கட்டிடத்தினுள் ஓட்டிவிட வேண்டும்- இதோ!
சட்டென்று சுதாரித்து கொள்ளத் தெரியாத மரமண்டைகள்!
ஜீப் சுவரை நோக்கி விரைந்த போது-
இதோ பாய்ந்து விட்டேன் வெளியே!
நாசமாகப் போங்கள்!


ஜீப்பிலிருந்த துப்பாக்கி ஒன்றை கையி-லெடுத்துக் கொண்டு ஓடினான்-
கவச வண்டிகளின் துணையிருந்தா-லன்றி காப்டனின் படையை வெல்ல முடியாது!
திடீரென்று-மேலே-
பீட்டரின் தபால் விமானம்-கொரில்லாக்கள் அவனை சந்திக்குமுன் நான் முந்திக் கொள்ள வேண்டும்!
அந்த பைலட் இங்கே நடப்பதை தெரிந்து கொள்வதற்கு முன் கைது செய்துவிட வேண்டும்-
அந்த சிறு விமானம் நின்றதும்-
என்ன விஷயம கார்ட்டர்?
இறங்காதே- எஞ்ஜின் ஓடிக் கொண்டே இருக்கட்டும்!
ஏன் அப்படி தலைதெறிக்க ஓடி வந்தாய்!
பிறகு சொல்கிறேன் விவரமாக- முதலில் விமானத்தை மேலே ஏற்று!


வந்து- நீ சொல்வது-
விரட்டிக் கொண்டு வருகிறது ஆபத்து- என்னை நம்பு!
ஒரு கொரில்லா ஜீப்பை ஓட்டிக் கொண்டு வருகிறதே- நம்பவே முடியவில்லையே!
சுட்டுத் தள்ளுங்கள்!



ஐயோ- தோட்டாக்கள்!
அவர்களை தேக்கி வைக்கிறேன்- நீ விமானத்தை மேலே ஏற்றும் முயற்சியில் ஈடுபடு!
விரைந்து நெருங்கிய ஜீப்பின் சக்கரங்களை குறி வைத்தார் கார்ட்டர்-
நான்கு காலி!
ஐயோ
கூடுதல் வேகத்தோடு இன்னொரு ஜீப் பாய்ந்தோடி வந்தது-
விமானத்தின் வால்பகுதியருகே இருக்கிறார் கள்- குறி வைக்க வசதியில்லை!
இதோ- மேலேறி விட்டோம்!


ஜீப்பிலிருந்த ஒரு கொரில்லா பாய்ந்து விமானத்தின் வால் பகுதியைப் பற்றிக் கொண்டது!
ஹே- என்ன விவகாரம்?
கொரில்லா ஒன்று தொற்றிக் கொண்டிருக்கிறது பின்னல்! அதை வீழ்த்த நானுயிற்று!
அவகாசம் இல்லே- முதல் குண்டிலேயே காரியத்தை கச்சிதமாக முடித்து விட்டா- லன்றி விமானம் எங்காவது மோதிவிடும்!
குறி தவறவில்லே- ஆனல் அந்த கொரில்லா பிடி தளர்ந்து விடுபட்ட போது அந்தச் சிறிய விமானம் பலமாக அதிர்ந்து குலுங்கியது-
டமால்!
ஒருவாருக சமாளித்துக் கொண்டு விமானம் உயரே ஏறியது-
ஒரு வழியாக தப்பி விட்டோம் தோழரே!



அடர்ந்த காட்டுப் பிரதேசத்தின் மேலே விமானம் சீராக பறந்து செல்கையில் அனைத்து விபரங்களையும் பீட்டருக்கு எடுத்துரைத்தார் கார்ட்டர்-
இதற்கிடையே-விமான தளத்தில்-
தப்பிவிட்டதாக நினைக்கிறான்-அந்த கார்ட்டர் பயல்! விட்டேனா பார்-
நின்று கொண்டிருந்த இன்னொரு விமானத்தினுள் ஏறி அமர்ந்தது காப்டன்-
அதைத் தொடர்ந்து-
அங்கே கவனி- நேராக நம்மைத்தான் குறி வைத்து வருகிறது அந்த விமானம்!
சரமாரியாகத் தோட்டாக்கள் வரத் தொடங்கியது-
திம்பா- எஞ்சினைக் குறி வை!


பலே- பலே-
தொலைந்தார்கள்!
ரட்ரட்ட்ட்!



கார்ட்டர் கலவரத்தோடு பேசலானர்-
உடனடியாக விலகிச் சென்று விடவேண்டும்- ஒரு குரங்குக்கு நீ சளைத்தவனா- காட்டு உன் சாகஸத்தை!
சட்டென்று வட்டமடித்து மேலே ஏறியது பீட்டரின் விமானம்-
இப்போது பார்- என்ன நடக்கிறதென்று!
சரி- இனி நீ உன் கை வரிசையைக் காட்டு பார்ப்போம்!
கார்ட்டரின் துப்பாக்கி ஓய்வின்-றிச் சீறியது-
யீஈஈஈ-
சண்டாளப் பயல்-மறுபடியும் ஜெயித்து விட்டானே! இந்த விமானம் கூடுதல் வேகத்திறன் கொண்ட தாகையால் உட னடியாக தப்பிச் சென்று, கார்ட்டரை கொல்ல நல்லதொரு திட்டத்தை பின்னர் தயார்ப்பேன்!
ஆனல் திடீரென்று-
ஐயோ- எஞ்ஜின் நின்று விட்டதே- தொலைந்தேன்!


அந்த குரங்கு ஏதோ சிக்கலில் மாட்டிக் கொண்டதாகத் தெரிகிறது- எரிபொருள் தீர்ந்து போயிருக்கலாம்!
அதையடுத்து காப்டனின் விமானம் தலை குப்புற விழுந்தது-
டமால்!
கீழே விழுந்து நொறுங்கிய காப்டனின் விமானம் தீப்பற்றிக்கொண்டது-
காப்டனின் நாடாளும் பேராசைக் கனவுக்கு முற்றுப் புள்ளி விழுந்து விட்டது!
இந்த விபரீதம் மட்டும் நிகழ்ந்திரா-விடில் அந்த சைத்தானின் திட்டம் வெற்றி பெற்றிருக்கக் கூடும்!
அங்கே கீழே பார்- பிரதான நிலத்-திலிருந்து துருப்புகள் வந்துசேர்ந்து விட்டன- ரேடியோ மூலம் செய்தி-யனுப்பி அவர்களை வரவழைத்து இருக்க வேண்டும்!


காப்டன் செத்து விட்டபின், வழி நடத்த தலைவன் இல்லாத கொரில்லா படைகளி டையே குழப்பமும், தயக்கமும் நிலவி யது-அவற்றை சுலபமாக வெற்றி கொள்ள முடிந்தது.
எல்லா குரங்குகளும் மீண்டும் கூண்டில் அடைக்கப் பட்டன-
உங்களுக்கு உரிய இடம் இது தான்- போங்கள் உள்ளே!
எல்லா ஏற்பாடுகளையும் சுற்றிபார்த்த கார்ட்-டரும் லோமாக்ஸ-ும் திருப்தியடைந்தனர்-
ஒரு கட்டத்தில் எங்கே அவை நம்மை மிஞ்சி விடுமோ என்ற அச்சம் இருந்தது!
இனிமேல் உங்களுடைய ஸீரம் - X ஐ இரும்புப் பெட்டகத்தினுள் பூட்டி வையுங்கள் புரபஸர். இது மாதிரி இன்னொரு முறை அசம்பாவிதம் ஏற்பட்டால் தாங்காது-!
எங்கும் சகஜ நிலை திரும்பிவிட்டது!
இந்த அமைதி தொடர்ந்து நீடிக்கட்டும்!
முற்றும்.
45


அறிமுகம்!
கம்ப்யூட்டர் மனிதன்!
ஜூனியர்
லயன் காமிக்ஸ்
முழு வண்ணத்தில்!